# மணிச்சிகை

## காலாண்டு மின்னிதழ்

மலர் : 1 சனவரி - மார்ச் 2024 இதழ் : 1



# மணிச்சிகை

காலாண்டிதழ்

**சனவரி - மார்ச் 2024 இதழ் - 1**


<u>பதிப்பாசிரியர்</u>

முனைவர் ஜெ.போ.சாந்திதேவி

<u>முதன்மை ஆசிரியர்</u>

முனைவர் பூ,பூங்கோதை

<u>பொறுப்பாசிரியர்</u>

வீ.அதிவீரபாண்டியன்

<u>ஆசிரியர் குழு ( பேராசிரியர்கள் )</u>

முனைவர் கோ.சுப்புலெட்சுமி

முனைவர் மா.செல்வத்தரசி

முனைவர் ஜெ.கோகிலா

முனைவர் அ.நந்தினி

முனைவர் தி.பிருந்தா

<u>ஆசிரியர் குழு ( மாணவர்கள் )</u>

அ. முகம்மது இஸ்மாயில் - பி.ஏ II

கோ.ஜா நான்சி எல்பின் - பி.லிட் II

ம. யோகஶ்ரீ - பி.ஏ II

சு. ராஜமாலதி - பி.ஏ II

இரா.புனிதவள்ளி - எம்.ஏ I

மின்னஞ்சல் :

manicchikai2023@gmail.com


**கட்டுரைகள்**


1. காரைக்கால் அம்மையாரின் கவி நயம் - முனைவர் ஜெ.போ சாந்திதேவி................. 5
2. திருக்குறளில் ஆளுமைச் சிந்தனைகள் - முனைவர் கோ.சுப்புலெட்சுமி..................... 13
3. ஒப்பீட்டு நோக்கில் புறப்பொருள் வெண்பாமாலையும் சிலப்பதிகார வேட்டுவவரிப் பாடல்களும் - கோ.ஜா.நான்சி எல்பின்.............................. 23
4. மீராவின் ‘ஊசிகள்’ எனும் கவிதைத் தொகுப்பில் எள்ளல்கள் - ம.யோக ஶ்ரீ ....................................... 31
5. திருக்குறளில் வாழ்வியல் அறம் - அ. முகம்மது இஸ்மாயில் ................... 36
6. சிறார் இலக்கியத்தில் புனைவுகள் - வீ.அதிவீரபாண்டியன் ......................... 46
7. காரிகையின் கனவு – கோ. ஜெயலட்சுமி .................. 54


**சிறுகதைகள்**


1. கருவாச்சியின் மாமன் - இரா.புனிதா ....................... 27
2. வகுப்பறையில் வளர்த்த பிள்ளை – தி.விக்னேஷ்குமார் .......................... 41
3. காத்திருப்பு – ச. சந்தியா ........................................... 44


**கவிதைகள்**


1. தமிழர் திருநாள் – சு. நந்தினி ................................. 12
2. ஐக்கூ கவிதைகள் – முனைவர் மு.செந்தில்குமார்........ 19
3. மழை – ர. அழகுபாண்டி ........................................... 22
4. காமராசர் – ஜா. விஜயராகவன் ............................. 30
5. தாய் – மு.தமிழ்ச்செல்வன் ........................................ 40
6. ஆறு – செ. பவானி ................................................ 43
7. பிரிவு – தேன்மொழி .................................................. 56
8. படிக்க ஆசை – சு.ராஜமாலதி................................. 57


**ஓவியங்கள்**


1. ம.ராஜராஜேஸ்வரி ................................................ 18
2. பா.நந்தினி ............................................................ 53
3. மு.கருப்புச்சாமி ..................................................... 58


**நூல் மதிப்புரை**


1.செகாவின் மீது பனி பெய்கிறது – கோ.ராஜகுமாரன்... 20

# வாழ்த்துரை



வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி

செயலாளர், நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

பழமையும் பெருமையும் ஒருங்கே அமைந்த மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் தமிழ்க் காப்பு பணியை முதன்மை நோக்கமாகக் கொண்டு வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் பெரும் முயற்சியால் 1901 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தொடங்கப்பட்ட நோக்கம் குன்றாமல் 123 ஆண்டுகளாக தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு வருகிறது. பழைய ஏடுகளை தொகுத்தும் பதிப்பித்தும் அறிஞர்களின் ஆய்வு திறத்தினைப் பரப்பும் நோக்கோடு 1902 ஆம் ஆண்டு செந்தமிழ் திங்கள் இதழ் தொடங்கப்பட்டது. செம்மொழியாக அங்கீகரிக்க காரணமாய் அமைந்த பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி எனும் கட்டுரை வெளிவந்தது இவ்விதழில் தான். அறிஞர்களின் ஆய்வுத் திறத்தினை சிறப்பாக வெளியிட்டும் நற்றமிழ் கல்வியளித்தும் தமிழுக்கு அணி சேர்த்து வரும் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், செந்தமிழ் கல்லூரியின் தமிழ் வளர்ச்சிப் பணியின் தொடர்ச்சியாய் மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணர்ந்து அவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் 'மணிச்சிகை' எனும் காலாண்டு மின்னிதழ் தொடங்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்விதழில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியம் போன்ற படைப்புகள் இடம் பெறுகின்றன. இத்தகைய சீரிய பணியை முன்னெடுத்துள்ள கல்லூரி முதல்வர் , ஆசிரியர் குழுவினர், மாணவ குழுவினர், பேராசிரியர்கள் அனைவருக்கும் அகம் நிறைந்த பாராட்டுகள்.

# வாழ்த்துரை



இராணி இலக்குமி குமரன்சேதுபதி

செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!

உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழ்மொழி. உலககெங்குமுள்ள மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்வது நம் தமிழ்மொழி. அகம் புறம் என்ற அகிலத்து மக்களின் வாழ்வியலை முழுமையாகக் கொண்டது இலக்கியங்கள். இவ் இலக்கியத்திற்காக வகுக்கப்பட்ட இலக்கணமானது ஐந்திலக்கணச் சிரப்பினையுடையது. இச்சிறப்புமிகு தமிழ் மொழியானது இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா... என்று பல்வேறு நாடுகளிலும் தனது ஆட்சியினை செலுத்தி வருகிறது.

முச்சங்கத்தில் முத்துக்குளித்த தமிழ்மொழியானது, மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தில் புத்துயிர் பெற்றது. இந் நான்காம் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர், மறைமலையடிகள், ரா.இராகவையங்கார், அரசஞ்சண்முகனார், மு.இராகவைலங்கார் போன்ற தமிழ் அறிஞர்கள் தமிழ் பணியாற்றினர். ஓலைச்சுவடிகளைப பதிப்பித்து தமிழறிஞர்களால் நுணுகி ஆராயப்பட்ட தமிழாய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதற்காக 20 ஆம் நூற்றாண்டில் 'செந்தமிழ்' என்ற திங்கள் இதழானது பிறந்தது. இன்றைய 21 ஆம் நூற்றாண்டு காலத்தில் பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆய்வுச் சிந்தனைகளை பல்வேறு தளங்களில் பதிவு செய்வதற்காக முகிழ்ந்த நூல் 'மணிச்சிகை' ஆகும்.

தென்பொதிகையில் மலர்ந்திட்ட தொண்ணூற்ஒன்பது வகையான மலர்களுள் ஒன்றான மணிச்சிகை தமிழரின் மதிப்புமிகு பண்புகளை மாண்புறச் செய்கிறது. மணியெனும் ஓசையினையும் சிகையெனும் அலங்காரமுடையதாய் திகழும் காலாண்டு இதழான மணிச்சிகை, உலகு உள்ளளவும் ஒளிரும் என்று வாழ்த்துகிறேன்.

# பதிப்புரை



**முனைவர் ஜெ.போ.சாந்திதேவி**
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

தமிழ் மொழியின் வளம் காத்து இலக்கண இலக்கியச் செழுமைகளை பரப்பும் நோக்கில் முச்சங்கம் கொண்டு முத்தமிழ் வளர்த்த நான்மாடக்கூடலில் வள்ளல் பொன் பாண்டித்துரைத் தேவர், மன்னர் பாசுகர சேதுபதி ஆகியோரின் அரும்பெரும் முயற்சியின் விளைவால் தொடங்கப்பட்டது நான்காம் தமிழ்ச்சங்கம். பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை தொகுத்தும் பகுத்தும் பதிப்பித்தும் பல்வேறு நிலைகளில் மொழியினை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு கொண்டு சேர்ப்பதில் நான்காம் தமிழ்ச் சங்கமும் இயைந்து பணியாற்றுவது இவ்வுலகம் அறிந்ததே. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் அங்கமான செந்தமிழ்க் கல்லூரியில் ந.மு. வேங்கடசாமி நாட்டார், பாவேந்தர் போன்றோர் பயின்று பின்னாளில் பெரும் தமிழறிஞராய் திகழ்ந்து மறைந்தும் நம் மனத்தில் நிறைந்திருக்கும் பெருமைக்குரியவர்கள். அவ்வகையில் மாணவர்களை சிறந்த ஆளுமை மிக்கவர்களாக வளர்க்க வேண்டும் என்று பல்வேறு ஆக்க பணிகளை செய்து வருகின்றோம். அதன் ஒரு அங்கமாய் பேராசிரியர்கள், மாணவர்கள் படைப்புகளை வெளியிட்டு ஊக்குவிக்கும் நோக்கோடு 'மணிச்சிகை' என்னும் காலாண்டு திங்களிதழ் தொடங்கப்படுகிறது. இவ்விதழ் தொடங்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர், செயலாளர், செந்தமிழ் கல்லூரியின் தலைவர், செயலாளர் மற்றும் ஆட்சி குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள் ஆகியோருக்கு நன்றி. இவ்விதழ் அரும்பாகி மொட்டாகி மலராக காரணமாய் அமைந்த ஆசிரியர் குழுவில் இடம் பெற்றிருக்கும் பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் படைப்புகளை வழங்கியிருப்போருக்கும் அகம் நிறைந்த நன்றி !

பூத்திருக்கும் ஒற்றை மலர் வரும் காலத்தில் சோலையாக மாற
ஒன்றி உழைத்திடுவோம்

# காரைக்கால் அம்மையாரின் கவி நயம்



முனைவர் ஜெ.போ.சாந்திதேவி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

தமிழிலக்கிய மரபில் சங்கக் கவிதைகள், காப்பியங்களுக்கு அடுத்த நிலையில் பக்தி இலக்கியமானது வருகின்றது. சைவமும், வைணவமும் இந்த சமூகத்திற்கு பெரும் கவிதைகளை வழங்கி உள்ளது. சங்கப் பெண் கவிஞர்களுள் தன்னை பாடல்களின் வழியும் அதன் போக்கின் அடுத்த நிலையில் ஔவையார், கனவுப் பெண்ணாக ஆண்டாள், பேய் வடிவம் வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருக்கும் காரைக்காலம்மையார் இவர்கள் மூவருமே தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தினை வளர்த்து சென்ற கவி ஆளுமைகள் ஆவர். இவர்களுள் காரைக்காலம்மையாரின் கவிதைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

கால்களாகக் காரைக்காலம்மையார் தெய்வப் பிறப்பு, பேயுருவம் வேண்டிக எனக் கணவன் ஒதுக்கிப் போய் விட, தனக்கு இப்பிறப்பு வேண்டா, பேயுருவம் வேண்டிப்பெற்று, தலைவனை கொண்டு கயிலை நடந்து சென்று சிவனாலலேயே அம்மையே என்று அழைக்கப்படுகின்றார்.

**இறவாத இன்ப அன்பு**
**வேண்டிப் பின் வேண்டுகிறார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும்**
**பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும்**
**வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவாதீ ஆடும் போதுன்**
**அடியின் கீழ்**

சிவனிடம் தான் நினைத்தவற்றை வேண்டிக்கொண்டு, திருவாலாங்காட்டில் அவன் காலடியில் தஞ்சம் புகுகின்றார். காரைக்காலம்மையாரின் திருவலாலாங்காட்டு மூத்த திருப்பதிகங்களில் இவை இரண்டுமே தனித்து கவிதையாக அடையாளப்படுத்தி நிற்பவை. அற்புத திருவந்தாதியில் நயமான பாடல் வரிகளும், திரு இரட்டை மணிமாலையும் வளமையான பாடல்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன. இவற்றுள் முதல் பதிகமானது, சிவன் நடனமாடும் திருவாலங்காட்டு தலத்தினையும், இரண்டாவது பதிகம் சிவனின் தாண்டவத்தினையும் முன்னிறுத்தி பேசுபவை. இவற்றுள் நின்று ஆடும்

களமாகவும், அடுத்து ஆட்டமாகவும் அமைந்துள்ளது. இந்த இரு பதிகங்களும் பின் புலத்தில் சுடுகாடு பற்றிய விவரங்களும், பேய்கள் குறித்த சித்தரிப்பும் சிறுகதை போலும், நாடகம் போலும் அமைந்துள்ளதை உணரமுடிகின்றது.

திருவாலங்காட்டு முதல் பதிகத்தில் ஆலங்காட்டின் சிறப்பு குறித்து சொல்லப்பட்டுள்ளது. தனங்கள் பெற்றி, நரம்புகள் வெளித்தெரிகிற மாதிரி இருக்கும் ஒரு பெண் பேய், குழிவிழுந்த கண்கள் வெண்மையான பற்கள், உள்வாங்கிய வயிறு, செம்பட்டையான தலைமுடி நீண்ட நிலையில் நகங்கள் பரடு உயர்ந்த கவைக்கால்கள். இப்படிப்பட்ட அந்தப் பேய் சுடுகாட்டில் தங்கியுள்ளது. கூச்சலிட்டுக்கத்தும். இதுதான் நீளமாய் வளர்ந்து கிடக்கும் சடைமுடிகள் எட்டுத்திசையும் பறக்க மனமகிழ்ந்து, நெருப்பைக் கையில் ஏந்தி தாண்டவம் ஆடும் என் அப்பன் இருக்கும் இடமான திருவாலங்காடு. இவ்வலங்காட்டில் பெண் பேயின் உருவமானது இடம்பெற்ற பாங்கினை அறிய முடிகின்றது. இவ்வாறு சொல்லப்பட்ட சிவதாண்டவத்தின் மூலமாக திருவாலங்காட்டைக் காண்பிக்கிறது கவிதை. பெண் பேய் பற்றிய காட்சிகளில் சுடுகாடு தோற்றத்தில் கொள்கின்றது என்றால் சிவனின் திருத்யக் காட்சியில் திருவாலங்காடு துலக்கம் பெறுகின்றது.

காட்சிகளை அடுக்கிய நிலையில் வரிசையகத் தொடுத்து சிறந்த சொல்லாட்சியோடு கவிதையாக சொல்லப்பட்டுள்ளது.

**கொங்கை திரங்கி நரம்பு எழுந்து**
**கிண்டுகண் வெண்பல் குழவயிற்றுப்**
**பங்கி சிவந்திரு பல்கள் நீண்டு**
**பரயர் நீளகணைக்காலோர் பெண்பேய்**
**தங்கி அலறி உலறு காட்டில்**
**தாழ்கூடை எட்டுத்திசையும் வீசி**
**அங்கம் குளிர்ந்து அனல் ஆடும் எங்கள்**
**அப்பன் இடத்திரு ஆலங்காடே**

இதேபோல் இரண்டாவது பதிகத்தில் காட்சிகளோடு அமைந்து, சிவனின் நடனமானது பேசப்படுகின்றது. இதில் நிரல்பட நான்கு அடுக்குதலி சுடுகாடு காட்சி ஆகிறது. மேலும் சிவனின் உருவமும் கொண்டு கவிதையானது நிறைவடைகிறது. அணி அலங்காரம் எதுவும் இல்லாமல் நேரடியாக நிதானமான கவிதையாக்கப்பட்டுள்ளது. நிலையில் காட்சிகளோடு பிணங்களை எரிப்பதனால் ஏற்படும் வெக்கையில், சுடுகாட்டில் உள்ள முள்ளிச் செடிகள் தீய்ந்து போய்க் கிடக்கிகன்றன. ஒருபுறம் ஈமச்சடங்குக்காக ளித்த ஓமக்குச்சிகள் கருகிக்கிடக்கின்றன. இன்னொரு பக்கம், சடலத்தின் மூளை ளியும் தீயில் உருகிச்

சிதறிப்போய்க் கிடைக்கிறது. கள்ளிச்செடிகள் வொள்ளிக்குச்சிகளாக மாறித்த தோற்றமளிக்கின்றன. இதுமாதிரி கடுமையான வெம்மை படர்ந்த சுடுகாட்டின் நடுவே புள்ளிமான் தோலை உடுத்தி, புலித்தோலை இடுப்பில் கட்டி இந்த சுடுகாட்டையே துயில் கொள்ளும் இடமாகவும் கொண்டு சிவன் தாண்டவம் ஆடுகின்றான். இதனை போகிற போக்கில் கவிதையாக இயல்பான நிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முள்ளி தீந்து முளரி கருகி
மூளை சொரிந்து உக்குக்
கள்ளி வற்றி வெள்ளிப் பிறங்கு
கருவெம் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோல் ஒன்று உடுத்துப்
புலித்தோல் புயல்கு இட்டு
பள்ளி இடமும் அதுவும் ஆகப்
பரமன் ஆகுமே

என்கிறது பதிகக்கவிதை. சிறுகதை போல அமைந்த ஒரு கவிதையில் சிதையில் எரிந்து கொண்டிருந்த பிணத்தின் கொழுப்பை விழுங்கிய ஒரு பெண்பேய், மண்டையோடுகளை மாலையாகக் கோர்த்து தன் மகள் பேய்க்கு அணிந்து அழகுபார்த்து, காளி எனப்பெயர் சூட்டி, சீராட்டி பாராட்டி பால் கொடுத்துபோயிற்று. போன தாய் வராமல் இருக்கவே, அழுத நிலையில் உறங்கிவிடுகிறது பேய். இத்தகைய நிலைபெற்ற சுடுகாட்டில் தான் என்னுடைய அப்பனான சிவன் இருக்கும் திருவாலங்காடு ஆகும். பெண் பேய் தனது மகவை வளர்க்கும் அருமையையும், தாயைத்தெம் மகவின் நிலையை கவிதையாகவும், சிறுகதையாகவும் சொல்லியுள்ளார் காரைக்காலம்மையார்.

இக்காட்சியின் பின்புலமே சூழலைக் காட்டி வருகின்றன. மனித வாழ்க்கையில் இருப்பது போலவே பேய்களின் வாழ்க்கையிலும் தாய்ப்பாசம், பிள்ளைப்பாசம் என்று கவிதைப் பொருளானது கூறுகின்றது. மேலும் வெந்து கிடக்கும் ஒரு பிணத்தின் தன்மையை அறியாமல், அதன் பக்கத்தில் போய் விரலால் குத்திப் பார்க்கிறது ஒரு பேய்.சூடு தாங்க முடியாமல் கத்திக் கூச்சலிட்டபடியே எரியும் நெருப்பைக் கடந்து செல்லும் பதற்றத்தில், உரு பெரிய பானை வயிற்றுப் பேய் மேல் மோதிவிடுகின்றது. இதைப் பார்த்துப் பல பேய்கள் பயந்து ஓடுகின்றன. இது மாதிரியான சுடுகாட்டில் தான் சிவபெருமான் பித்தனாகக் கூத்தாடுகின்றான் என இயல்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

பேய்களின் நிலையைச் சொன்னவர், சிவனின் ஆட்டமானது வாத்தியங்களின் பின்னாணியில் ஆடப்படுவதை சொல்லிச் செல்கின்றார். வாத்தியங்களின் பெயர்களைக் கொண்டே கவிதையும் சொல்லப்பட்டுள்ளது. துத்தம் கைக்கிளை, விளரி, தாரம், உழை,

இளி குரல், ஆகிய ஏழுவகை நரம்பு ஒலியின் பின்னணியில் பாட்டுப் பாடி, கச்சேரி, கொக்கரை தக்கை, தகுணிதம் துந்துபி, தாளம், வீணை மத்தளம், கரடிகை கொக்கரை மென்தோள், தமருகம், குடமுழா, மொந்தை ஆகிய வாத்தியங்கள் எல்லாம் ஒலிக்கக் கூத்தாடும் இடமாகின்றது சிவன் ஆடும் திருவாலங்காடு... இசைக்கருவிகள் பதினான்கும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. வழக்கமான நிலையில் சொல்லப்படாமல் கவிதையாக மாறியுள்ளதை காரைக்காலம்மையாரின் நியமான சொல்லாட்சியில் அறிய முடிகின்றது.

**துத்தம் கைக்கிளை விளரி தாரம்**

**உழை இளி ஓசை பண் செழுமப் பாடி**

**சச்சரி சொக்கரை தக்கையோடு**

**தகுணிதம் தந்துபி தாளம் வீணை**

**மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்**

**தமருகம் குடமுழா ஏமாந்தை வாசித்து**

**அத்தனை விரவினோடு - ஆடும் எங்கள்**

**அப்பன் இடம் திருவாலங்காடே.....**

காட்சிகளான கவிதை, இதில் சிவனின் ஆடல் மட்டும் சொல்லப் படாமல், அவன் ஆடும் பின்புலக் காட்சிகளும் எளிமையாக எடுத்தாளப்பட்டுள்ளது. இவற்றில் நிலக்காட்சிகளைக் கொண்டே நிகழ்வினை உணர்ந்து கொள்ள முடிகின்றது. எட்டி, இலவம், ஈகை சூரை, காரை ஆகிய மரங்களும் வறண்ட பூமியில் படரும் கொடிகளும் எங்கும் அடர்ந்து படர்ந்திருக்கும் சுடலையில் பேய்கள் சூழ்ந்து பிணங்களின் குடலைக் கௌவ்வி எடுத்துத் திரியும். இப்படிப் பிணங்களின் நிறைந்த சுடுகாட்டில் பறை போலப் பெரிய கண்கள் உள்ள பேய்கள் ஒவம் கொட்டவும் சிறிய பேய்கள் பாடவும் சிவன் கூத்தாடுகின்றான். கவிதையின் தொடக்கத்திலேயே வரிசையாக மரங்களின் பெயர் சொல்லப்படுகின்றது. இவை சுடுகாட்டின் பின்ட புலத்தைக் காட்டுகின்றன. பிள்ளைப் பேய்களின் நடவடிக்கைகள், பேய்கள் இசைப்பதும், பாடுவதும் என முழுக்க முழுக்க காட்சிப்படுத்தி கவிதையானது படைக்கப்பட்டுள்து.

**எட்டி இலவம் ஈகை சூரை**

**காரை படிந்து எங்கும்**

**சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி**

**சோர்ந்த குடல் கௌவப்**

**பட்ட பிணங்கள் பரந்த காட்டில்**

**பறை பேல் விழிகண் பேய்**

கொட்ட முழவம் கூளி பாடக்

குழகன் ஆடுமே

எனக் கவிதையானது யதாத்தமாக காட்சிப்படுத்தப் படுகின்றது. காரைக்காலம்மையரின் இத்திறனானது காட்டின் சிறப்பினை சொல்லுவதோ பேயின் சிறப்பினை சொல்லுவதோ குறிக்கோளாக கொள்ளாமல் இதனைச் சார்ந்த பின் புலத்தில் நடக்கும் சிவனின் ருத்ர தாண்டவத்தினைச் சொல்லுவதே நோக்கமாகக் கொண்டு பாடியுள்ளார். இவை காட்டு, நிலக்காட்டு, மரம், செடி, கொடிகள் இசைக்கருவிகள் இவை எல்லாம் ஒன்றிணைந்து கவிதையாக உருப்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. சிவனையே முழுக்க முழுக்க பாடாமல் தன்ட புனைவுத் திறத்தால் பின்புலக் காட்சிக்கு உயிர் தரப்பட்டுள்ளதை மற்றொரு கவிதையில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு புறம் பிணத்தைக் குத்திக் கிழித்துத் தின்னும் பறவைகள், இன்னொரு பக்கம், பிணத்தின் தலையைக் கௌவிச் செல்லும் நரி. வேறொரு பக்கத்தில் அக்கக்கு என்று அலறும் ஆந்தை. அதன் அருகியேயே இமை மூடாது பார்த்திருக்கும் ஒரு சிறு கோட்டான்.வெருட்டும் ஒரு பெருங்கோட்டான். மற்றொரு புறம் அங்குமிங்கும் அலையும் ஒரு கிழட்டு நரி என விலங்குகளும் பறவைகளும் சூழப்பட்டுள்ள நிலையில் சிவன் நடனமாடுகின்றான். சுடுகாட்டைப் பற்றிய காட்சிகளாய் அமைந்துள்ள நிலையில் இவை கவிதையாகவும் அமைந்து விடுகின்றது.

புள்கள் பொதுத்த புலால் வெண் தலையைப்

புறமே நரி கவ்வ

சுட்டு என்று அழைப்ப ஆந்தைவீச

அருகே சிறு கூகை

உட்க விழிக்க ஊமன் வெருட்ட

ஓரி கதித்து எங்கும்

பிட்க நட்டம் பேணும் இறைவன்

பெயரும் பெருங்காடே....

என்று கூறுகின்றார் அம்மையார். கமலும் ளியும் கள்ளி மரக்கட்டைகளின் இடையே கால் நீட்டி, அனல் தீய்த்த ஒரு கட்டையை உருவி எடுத்து, அதில் உள்ள கரியை மசித்துக் குழம்பு, கண்களுக்கு மை தீட்டி, வெடுவெடு என்று சிரித்து. வெகுண்டுபோய் அங்கு வந்து நின்ற ஒரு மிருகத்தைக் கண்டு துள்ளி எழுந்து, எரிகின்ற சடலத்தின் மீதெல்லாம் விழுந்து, அந்த சாம்பல் புழுதியை அள்ளி சுடு நெருப்பை அவிக்கிறது ஒரு பெண் பேய். இப்படி இருக்கின்ற சுடுகாட்டில் நின்று ஆட்டம் புரிகின்ற இடமானது இந்தத் திருவாலங்காடு. இவை ஒரு நாடகம் போல அமைகின்றது பெண் கவிஞர்கள் பெண் சார்ந்த பிரச்சனை மட்டுமே தனது தாம் என்ற கண்ணோட்டத்தினை மாற்றி கற்பனை சார்ந்த ஒரு நாடகத்தினை பதிவு

செய்துள்ளார் காரைக்காலம்மையார், கமலும் நாடகம் போல் கற்பனை மிகுதியாக இருந்தாலும் கவிதையின் சாரம்சம் பரவலாகக் காணப்படுகின்றது.

**கள்ளிக் கவட்டு இடைக்காலை நீட்டிக்**
**கடைக் கொள்ளி வாங்கி மசித்து மையை**
**விள்ள எழுதி வெடு வெடு என்ன**
**நக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்**
**துள்ளிச் சுடலைச் சுடுபிணத் தீச்**
**சுட்டிட முற்றும் சுனத்து பூழ்தி**
**அள்ளி அவிழ்க்க நின்றாடும் எங்கள்**
**அப்பன் இடம் திருவாலங்காடே**

என கவிதை அமைகின்றது. இது போலவொரு மற்றொரு கவிதையானது தனித்துவமிக்க வரிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. சிறு குச்சிகளை வைத்துத் தீமூட்டி ஈமச்சடங்குகளாக ஆக்கி வைத்த சோற்றைக்குள்ள நரிகள் தின்று கொண்டிருக்கும் இப்படி ஒரு காட்சியை இதற்கு முன்பு தாங்கள் கண்டதில்லை என்று பேய்கள் கைக்கூலி கொட்டியபடி அங்குமிங்குமாய் ஓடுகின்றது. இப்படியான இடுகாட்டையே ஆடல் அரங்காகக் கொண்டு, பல வகைத் தாளங்கள் இட்டு வானளாவ கால் வீசி, அண்டமுற நிமிர்ந்த ஆடும் இடமானது சிவன் ஆடும் திருவாலங்காடு என்பதை யதார்த்தமாகச் சொல்லியுள்ளார் கவிஞர்.

**குண்டில் ஓமக்குழிச்சோற்றை வாங்கிக்**
**குறுநரி தின்ன அதனை முன்னே**
**கண்டிலோம் என்று கனன்று பேய்கள்**
**கை அடித்து ஓடு இடுகாடு அரங்கா**
**மண்டலம் நின்று அங்கு ஊளம் இட்டு**
**வாதித்து வீசி எடுத்த பாதம்**
**அண்டம் உற நிமிர்ந்து ஆடும் எங்கள்**
**அப்பன் இடம் திருவாலங்காடே.....**

என்கிறது கவிதை வரிகள். உயிரற்ற உடம்பை ஒழிப்பதற்காகவே உண்டாக்கப்பட்டது. இடுகாடும், சுடுகாடும், மரண நிகழ்வினை மனக்கண் முன்னே காட்டுவதால் சுடுகாட்டினை நன்காடு என்றழைக்கப்பட்டது. சுடுகாடு ஊருக்குள் இல்லாமல் காட்டுப்பகுதிகளிலேயே காணப்படும். இவை ஒதுக்குப் புறமாகப் இருப்பதனால் நரிகளும் ஆந்தைகளும் நடமாடுவது இயற்கையே. பிணம் தின்னும் கழுகுகள் வட்டமிடுவதும் சாத்தியமான ஒன்றே. இங்கு இருக்கக்கூடிய பேய்கள் சுடுகாட்டின் அம்சம். கள்ளிச்செடிகளும் கருகிப்போன மரம்

செடி கொடிகள் இங்கு பரந்து காணப்படும். இதனை கவிதை வெளிக்குள் கொண்டு வருவது சாத்தியமில்லாதது. ஆனால் பெண் கவிஞரான காரைக்காலம்மையார் சுடுகாட்டையும், பேய்களையும் பரக்கச் சொல்லிச் செல்கிறார். ளியும் சிதை, பிணங்கள், சாம்பல், சுடுகின்ற நெருப்பு முற்றிய நிலையில் வாகைமரம், ஈமச்சோறு, தீய்ந்து போன முள்ளிச்செடிகள், ஓம விறகுகள், வற்றிய நிலையில் காணப்படும் கள்ளிச் செடிகள். மண்டிக்கிடக்கும் புகைகள் என சுடுகாட்டினையும் அதன் பின்புலங்களையும் கவிதை நயத்துடன் பதிவு செய்துள்ளார்.இவை மட்டுமின்றி மெலிந்த பெண் பேய் மை எழுதும் பெண் பேய், கோட்டான் ஆந்தை, குள்ளநரிகள் பேய்களின் கூட்டம், தாய் பேய் அதன் சேய் பேய், பருந்து, கொள்ளி வாய் பேய், காடை மயான சூழலில் உள்ள பிற உயிர்கள் ஆவிகள் அனைத்தும் கவிதையின் உட்கூறுகளாக படைக்கப் பெற்றுள்ளது.

சிவனைப் பற்றி சொல் இருக்கக்கூடிய பேய்கள் சுடுகாட்டின் அம்சம். கள்ளிச்செடிகளும் கருகிப்போன மரம் செடி கொடிகள் இங்கு பரந்து காணப்படும். இதனை கவிதை வெளிக்குள் கொண்டு வருவது சாத்தியமில்லாதது. ஆனால் பெண் கவிஞரான காரைக்காலம்மையார் சுடுகாட்டையும், பேய்களையும் பரக்கச் சொல்லிச் செல்கிறார். ளியும் சிதை, பிணங்கள், சாம்பல், சுடுகின்ற நெருப்பு முற்றிய நிலையில் வாகைமரம், ஈமச்சோறு, தீய்ந்து போன முள்ளிச்செடிகள், ஓம விறகுகள், வற்றிய நிலையில் காணப்படும் கள்ளிச் செடிகள். மண்டிக்கிடக்கும் புகைகள் என சுடுகாட்டினையும் அதன் பின்புலங்களையும் கவிதை நயத்துடன் பதிவு செய்துள்ளார்.

இவை மட்டுமின்றி மெலிந்த பெண் பேய் மை எழுதும் பெண் பேய், கோட்டான் ஆந்தை, குள்ளநரிகள் பேய்களின் கூட்டம், தாய் பேய் அதன் சேய் பேய், பருந்து, கொள்ளி வாய் பேய், காடை மயான சூழலில் உள்ள பிற உயிர்கள் ஆவிகள் அனைத்தும் கவிதையின் உட்கூறுகளாக படைக்கப் பெற்றுள்ளது.

சிவனைப் பற்றி சொல்லுகின்ற போது, அவிழ்ந்த சடை முடியானது எட்டுத்திக்கும் பரந்த நிலையில் இருப்பதாகவும், கையில் அனல் ஏந்தி ஆவைதாகவும், சொல்லுகின்றார். கூத்தாகவும், ஆனந்த தாண்டவமாகவும், இயற்கையே சுழன்று ஆடுவதாகவும், சூழல் கொண்டு வார்த்தைகள் கவிதையாகப் படைத்துள்ளார். சிவனை மையப்படுத்தி மேலும் சிவனின் ஆடலானது வாத்தியங்கள் இசைக்க, சிலம்பு ஒலிக்க பல கோலங்களில் திருவாலங்காட்டுக்குள் ஆடிய நிலையினை கவிதை நயத்துடன் யதார்த்தமாக பதிவு செய்துள்ளார் காரைக்காலம்மையார்.

# தமிழர் திருநாள்

பா வகை : நிலைமண்டில ஆசிரியப்பா

புதியன நுழைத்து பழையன நீக்கி
போகி உடனே மார்கழி செல்லென
தைதை என்று தைமகள் வந்தாள்
தமிழர் திருநாள் ஆன தைத்திரு
நாளில் கதிரவன் தோன்ற கரும்புகள்
கட்டி வானம் நெருப்பு காற்று
நீர்நிலம் என்ற பஞ்ச பூதம்
கொண்டு பொங்கலோ பொங்கல் என்று
நங்கை பொங்கல் வைக்க சித்திரை
அல்ல தமிழா தையின் முதலே
தமிழரின் புதுமை ஆண்டென பா(வே)ந்தன்
கூற இடையர் குலத்தார் தெய்வமாய்
வணங்கும் ஆநிரை பொங்கல் வந்தது
வீர இளைஞன் காளையை அடக்க
அதற்கு பல்வித பரிசும் பொருளும்
தந்து மனமோ மகிழ்ச்சியில் பொங்க
தைமகள் வந்து மூன்றாம் நாளில்
காணும் பொங்கல் இனிதே வரவே
உழவர் திருநாள் மகிழ்வுடன் வந்தது
ஏர்கள் பூட்டி விதைகள் விதைத்து
மக்கள் வாழ வியர்வை சிந்தி
வெயிலில் காயும் உழவனை வாழ்த்து(வோ)மே.




**சு.ஜெயநந்தினி**
இளம் இலக்கியம் மூன்றாமாண்டு




# திருக்குறளில் ஆளுமைச் சிந்தனைகள்



முனைவர் கோ.சுப்புலெட்சுமி
துணை முதல்வர்

'எல்லாப் பொருளும் இதன் பாலுள' எனப் பாராட்டப் பெறும் திருக்குறள் தமிழ் இலக்கியக் கருவூலத்தின் மாபெரும் பொக்கிஷமாகும். திருக்குறள் சமயச்சார்பற்ற தமிழ்மறை,

**"வள்ளுவர் செய் திருக்குறளை**
**மறவற நன்குணர்ந்தோர்**
**உள்ளுவரோ மனுவாதி**
**ஒரு குலத்துக்கு ஒரு நீதி"**

என்றும் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை போற்றியுள்ளார். இத்தகு சிறப்புமிகு திருக்குறளில் ஆளுமைச் சிந்தனைகள் பெறும் இடம் பற்றி இக்கட்டுரையில் சிந்திக்கலாம்.

### ஆளுமைச் சிந்தனைகள்

ஆளுமை என்பது நிலையான குணம் மற்றும் நடத்தையைக் குறிக்கிறது. ஆளுமைப்பண்பு ஒருவரது தனித்துவமான பண்பாகும். நாம் யார் என்பதை அடையாளப்படுத்தும் அம்சம் ஆளுமை. இந்த ஆளுமைச் சிந்தனைகள் திருக்குறளில் அதிகமாக இடம்பெற்றுள்ளன. ஒரு மனிதன் மனிதனாக வாழவும் மாமனிதனாக மேம்படவும் அவனுக்கு அடிப்படைத் தேவையாக ஆளுமை திறன் விளங்குகிறது.

### நம்பிக்கை

மனிதன் வெற்றி பெற்றவனாக விளங்குவதற்கு அடிப்படைத் தேவை நம்பிக்கை.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்ற வள்ளுவர் வாக்கு போல நாம் வாழ்வாங்கு வாழ ஆளுமைப் பண்பை மேம்படுத்த வேண்டும்.

### கல்வி

ஒருவனை சபை நடுவினில் கம்பீரமாக நிற்கச் செய்வது அவன் கற்ற கல்வி.

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"**

கல்வியே அவனுக்குச் செல்வம்.

**"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**

**சாந்துணையும் கல்லாத வாறு"**

கல்வி கற்றவனுக்கு எல்லா நாடும், ஊரும் சொந்தமாகும். எங்கு சென்றாலும் நற்புகழும் பெருமையும் கிடைக்கும். அந்தக் கல்வி மிகச் சிறந்த ஆளுமை உடையவனை உருவாக்கும்.

**துணிவு**

**"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**

**எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு"**

என்ற குறளில் அச்சப்படாத துணிவு, தர்மசிந்தனை, அறிவு, ஊக்கம் உடையவர் மிகச்சிறந்த தலைமை பண்பு உடையவராக இருக்க முடியும் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**

**முந்தி இருக்கச் செயல்"**

தன் மகன் ஆளுமை நிறைந்த தலைவனாக உருவாக வேண்டுமெனில் அவன் தந்தை அவனுக்கு சிறந்த கல்வி, கேள்வி வித்தைகள் பயிற்றுவித்து தயார்படுத்த வேண்டும்.

**"படைகுடி கூழ் அமைச்சு நட்புஅரண்ஆறும்**

**உடையான் அரசருள் ஏறு"**

என்று ஒரு அரசன் சிறந்தபடை, சிறந்த குடிமக்கள், உணவு உற்பத்தியில் தன்னிறைவு, நல்ல அமைச்சன், நல்ல நண்பர்கள், வலிய அரண் போன்ற ஆறு அம்சங்கள் கொண்டிருந்தால் அரசர்களுக்கு எல்லாம் அரசனாக விளங்க முடியும் என்று வள்ளுவர் கூறும் கருத்தை இக்கால நிறுவன மேலாண்மைக்கும் பொருத்திப் பார்க்கலாம். படை-பணியாட்கள், குடி-நுகர்வோர், கூழ்-தயாரித்த பொருள், நட்பு-பங்குதாரர்கள், அமைச்சு-ஆலோசகர்கள், அரண்-பாதுகாப்பு என்ற ஆறும் சிறப்பாக அமைந்தால் அந்த நிறுவனம் சிறந்த நிறுவனமாகத் திகழும் என்று கருதலாம்

**மன ஒருமைப்பாடு**

தான் மேற்கொள்ளும் செயலில் முழு மனத்தோடு சிந்தனையை ஒன்றுபடுத்தி அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டால் வெற்றி பெற்ற தலைவன் ஆக முடியும்.

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**

**திண்ணி யராகப் பெறின்"**

மன உறுதியோடு செயல்படும்போது நாம் விரும்பியதை திட்டமிட்டபடி அடைய முடியும். எடுத்துக்காட்டாக தேரோட்டி மகனாக வளர்ந்த கர்ணன் தனக்கு ஒரு அரசனைத்

தேரோட்ட வைப்பேன் என உறுதியாக எண்ணினான் அதனால் பாரதப் போரில் சல்லியன் என்ற அரசன் தேரோட்டினான்

**மனவலிமை**

உடல் வலிமையை விடவும் உறுதியானது மனவலிமை. தான் செய்யும் செயலில் எத்தனை இடையூறு வந்தாலும், மனம் கலங்காது உறுதியோடு செய்தல் சிறந்த ஆளுமைப்பண்பு என்கிறார் திருவள்ளுவர்.

**"கலங்காது கண்ட வினைக்கண் துலங்காது**
**தூக்கம் கடிந்து செயல்"**

மாபெரும் செயல்களை எல்லாம் செய்து முடிப்பதற்கு மனவலிமையே இன்றியமையாத தேவையாகிறது.

**"உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகத்து**
**வல்லியம் என்னும் செருக்கு"**

என்ற குறளில் ஊக்கம் இல்லாதவர்கள் இவ்வுலகத்தில் உயர்ந்த நிலையை அடைய முடியாது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். சான்றாக: அப்துல் கலாம் சிறுவயதில் பறவைகளைப் போல பறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார் அதனால் 2006 இல் அக்டோபர் 20 எம்.கே. ஐ என்ற போர் விமானத்தில் பறந்தார்.

**பண்பு நலன்கள்**

ஒருவர் மிகச்சிறந்த தலைமை பண்புடன் விளங்கினால் அவரை இவ்வுலகம் மகிழ்ந்து பாராட்டும். அதனால் மிகச் சிறந்த பண்புமிக்கவராக விளங்குவது அவசியம்.

**"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்"**

எவ்வளவு கற்றவராக இருந்தாலும் உலக மக்களோடு இணைந்து வாழக் கற்றுக் கொண்ட பண்புடையவராக இருத்தல் அவசியம்.

**சொல் வன்மை**

ஆளுமைப் பண்பில் மிக முக்கியமானது சொல்லாற்றல். ஒருவன் பேச்சாற்றல் நிறைந்தவனாகவும் சோம்பல் இல்லாதவனாகவும் திகழ்ந்தால் அவனே சிறந்த தலைவன் ஆவான்.

**` "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது"**

என்று குறிப்பிடுகிறார்.

## வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்

நம் வாழ்க்கையில் நாம் முன்னேறுவதற்கு மிக முக்கியமாக விழிப்புணர்வு தேவை. வாய்ப்புகள் எந்த நேரமும் நம் வாசல் தட்டலாம் அதனை உடனடியாக பயன்படுத்துபவர்கள் வெற்றியாளர்கள்.

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து"**

என்ற குறளில் வாய்ப்பு வருகின்ற வரை கொக்கு போல பொறுமையாக காத்துக் கொண்டிருக்க வேண்டும் வாய்ப்பு வந்தவுடன் கொக்கு எப்படி மீனை விரைவாக குத்தி தூக்குமோ அதுபோல விரைந்து பயன்படுத்த வேண்டும். அந்த நேரத்தில் தடுமாறினால் தோற்றுப் போவார்கள் அலைபேசி வந்த காலத்தில் நோக்கியா என்ற நிறுவனம் மிகப்பெரிய வளர்ச்சி பெற்றது. எல்லோர் கைகளிலும் அந்த அலைபேசி இருந்தது. ஆனால் திறன் மேம்படுத்தப்பட்ட அலைபேசி வந்தபோது நோக்கியா நிறுவனம் விழித்துக் கொள்ளாததால் வணிக ரீதியாக மிகவும் பின்தங்கியது. அதேபோல புகைப்படத்துறையில் "கோடக்" என்ற படச்சுருள் (பிலிம்) நிறுவனம் புகழ்பெற்று விளங்கியது அந்நிறுவன பொறியாளர் ஸ்டீவன் சாசன் 1970 இல் உருவாக்கிய டிஜிட்டல் போட்டோகிராபி என்ற விஷயத்தை கவனிக்க தவறியதால் நிறுவனம் மூடப்பட்டது.. எனவே பயன்படுத்து அல்லது இழந்து விடுவாய் (use or lose) என்ற இழப்பின் விதியை மறவாதவரே வெற்றி பெற்றவர் ஆவார்.

## தெளிவு பெறுதல்

எந்த காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதனை ஐயம் திரிபற நன்கு ஆராய்ந்து தெளிவுபெற்று செயல்படுபவர்களுக்கு வானம் வசப்படும்.

**"ஐயத்தின் நீங்கி தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நனியது உடைத்து"**

என்பது வள்ளுவர் வாக்கு அப்படி தெளிவு பெற்றதால் தான் உலகிலேயே முதன்முறையாக நிலவின் தென் துருவத்துக்கு "சந்திராயன்" அனுப்பி நம் இந்தியா பெருமை பெற முடிந்தது.

**ஊக்கம்**

**"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து**
**ஆள்வினை யின்மை பழி"**

என்று தீர்க்கதரிசனமாக வள்ளுவர் கூறுகிறார். உடல் குறைபாடு பழி அல்ல உள்ளத்தில் ஊக்கம் இன்மையே பழி என்றார் அதனை உணர்ந்ததால் தான் இன்று மாரியப்பன் தங்கவேலு என்ற மாற்றுத்திறனாளி தங்கப்பதக்கம் பெற்று பெருமை தேடித்தந்தார். பாரா

ஒலிம்பிக் என்ற மாற்றுத்திறனாளிகளுக்காக போட்டிகளில் உலக அரங்கில் இந்தியா தலை நிமிர்ந்து நிற்கிறது

## விடாமுயற்சி

திருவள்ளுவர் தெய்வம் இறங்கி வந்து உதவும் என்று சில இடங்களை சொல்கிறார். அவை விடாமுயற்சியோடு ஊக்கத்துடன் உழைப்பவனிடம் தெய்வம் தேடி வந்து நன்மை செய்யும் என்கிறார்.

**"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்"**

**"ஆக்கம் அதர்வினாச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை"**

என்ற குறட்பாக்களில் விதியின் மேல் பழி போட்டு சோம்பியிராது முயற்சிப்பவனுக்கு எல்லா நன்மைகளும் வந்து சேரும் என்பது வள்ளுவர் வலியுறுத்தும் கருத்துக்கள் ஆகும்

## காலமேலாண்மை


தலைவன் வெற்றி பெற்ற ஆளுமையாக விளங்க அவனுக்கு மிக முக்கியமானது கால மேலாண்மை. காலத்தை வீணடிக்காமல் எந்த நேரத்தில் எதை செய்வது என்று திட்டமிட்டு செயல்படுபவர்கள் சிறந்த ஆளுமை மிக்கவராக திகழ முடியும்.

**"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்"**

என்ற வாக்கில் வள்ளுவர் காலத்தை சரியாக கணித்து வீணடிக்காமல் செயல்படுபவனுக்கு இவ்வுலகமே வேண்டும் என்று நினைத்தாலும் அவனுக்கு அது உரிமை ஆகும் என்று குறிப்பிடுகிறார்.

## நிறைவுரை

திருக்குறள் இக்கால நிறுவன மேலாண்மை, தன்னம்பிக்கை நூல், வழிகாட்டும் நூல், ஊக்க நூல் என்று எந்த வகையில் நாம் தீர்மானிக்கின்றோமோ அந்த வகையில் வெற்றியைத் தேடித் தரும் நூலாக அமைந்துள்ளது வாழ்க்கையில் எந்த சூழ்நிலைகளிலும் நாம் பயன்படுத்த வேண்டிய வழிமுறைகளை எடுத்துக்காட்டும் வழிகாட்டியாக வள்ளுவர் தந்த வான்மறை திகழ்கின்றது பல திருக்குறள்களை மனப்பாடம் செய்வதை விட சில குறட்பாக்கள் படி வாழ்ந்து வந்தால் நாம் ஆளுமை மிக்க தலைவர்களாக வாழ முடியும்.






**ம.ராஜராஜேஸ்வரி**

முதுகலை முதலாமாண்டு

## ஐக்கூ கவிதைகள்

❖ நிறைவுற்றது….
சிக்கன் பிரியாணியில்
மிருகவதைப் பேரணி.

❖ அனாதை விடுதியில்
அனாதையாய் மனம்
அன்று "அம்மா" இன்று நான்!




முனைவர் மு.செந்தில்குமார்
உதவிப் பேராசிரியர்


❖ பழகிக் கொண்டது
கடல் மீன்
தொட்டிக்குள் வாழ….

❖ மார்கழிப் பனியில்
வியர்த்து நிற்கிறது…
இலைகள்

❖ கொப்பளிக்கிறது… கோபம்
கண்ணெதிரே
தொடுகிறான்…வளையல்காரன்.



❖ கடக்கலாம்
எந்த இருளையும்
உள்ளம் வெளிச்சமானால்…


<u>புத்தக மதிப்புரை</u>



**ஷெகாவின் மீது பனி பெய்கிறது – எஸ்.இராமகிருஷ்ணன்**

மதிப்புரையாளர் : கோ.ராஜகுமரன், முதுகலை இரண்டாமாண்டு

மொழி பெயர்ப்பு இலக்கியங்களுக்கென்றே தனிப்பட்ட வாசகர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு பரீட்சையமான பெயர்தான் 'எஸ். இராமகிருஷ்ணன் என்னும் ஆளுமை. எழுத்து, சினிமா என மொழிவரையறைக்கு உட்படாத அத்தனையும் தன் கட்டுரை நூல்கள் மூலம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்பவர். அவற்றுள் 'ஷெகாவின் மீது பனி பெய்கிறது' என்ற நூல் உலக இலக்கிய ஆளுமை பற்றியது. எஸ். இராமகிருஷ்ணன் தன் விருப்பமான ரஷ்ய இலக்கிய உலகில் இருந்தே இந்த கட்டுரை நூலை தொடங்குகிறார். ரஷ்ய இலக்கியங்களின் இரு பெரும் துருவங்களான லியோ டால்ஸ்டாய்யையும், பியோதர் தஸ்தாவேஸ்கியையும் அடுத்த அடுத்த கட்டுரைகளில் அறிமுகம் செய்கிறார். குறிப்பாக லியோ டால்ஸ்டாயின் மரணத்தில் தொடங்கும் இந்த கட்டுரை நூல் 'இறப்பு என்பது வாழ்வின் ஒரு சிறு பகுதியே' என்பதை உணர வைத்து விடுகிறது. ஒரு எழுத்தாளனுக்காக ரஷ்ய நாடாளுமன்றமே தான் பணிகளை ஒத்தி வைத்து இரங்கல் தெரிவிக்கிறது. அடுத்தடுத்த கட்டுரைகளில் ஆண்டன் ஷெகாவின் 'நாய்க்கார சீமாட்டியையும்' தஸ்தாவேஸ்க்கியின் 'வெண்ணிற இரவுகளும் கடந்து செல்கின்றன. வெண்ணிற இரவுகளை, 'இரவில் ஒளிரும் சூரியன்' என்று குறிப்பிடுகிறார். அடுத்ததாக சிறுகதை உலகின் மன்னனான மாப்பாசானை அறிமுகம் செய்துவிட்டு ஆண்டன் ஷெகாவின் மோசமான நாட்களை எழுத்தின் வழியே காலக்கண்ணாடியாய் நிலைநிறுத்துகிறார். ரஷ்யா உலக எழுத்து நச்சத்திரங்களுள் விடிவெள்ளியான மார்க்சிம் காரக்கியை அறிமுகம் செய்கிறார். அறியப்படாத அவரது சிறுகதைகளையும் அவற்றில் உள்ள கதாப்பாத்திரங்களையும் குறிப்பிட்டுச் சொல்கிறார். ரஷ்ய இலக்கிய தோற்றுவிப்பாளர்களான புஷ்க்கினையும் கோகலையும் அறிமுகப்படுத்தி அவர்தம்



படைப்புகளை சுவைக்கிறார். வின்சென்ட் வான்கோவின் ஓவியத்தையும் அவரது வறுமையையும் கண்ணில் காட்டுகிறார். இங்கிலாந்து பெண் எழுத்தாளரான 'வெர்ஜினியா உலப்' தான் மூத்த அக்காவாக நினைத்து ரசித்திருக்கிறார். இங்கிலாந்திலிருந்து அடுத்து அமெரிக்காவின் சிறந்த எழுத்தாளரான எர்நெஸ்ட் ஹேமிங்வெவையும், ருவால்டையும் தன் எழுத்துகளால் அலங்கரிக்கிறார். ஹேம்மிங்வெ அறியப்பட்டது போல ருவால்ட் அறியப்படாமல் போய்விட்டார் என்கிறார். தொடர்ந்து 'எண்ணும் மனிதனின்' பெயர் தெரியாத எழுத்தாளரையும் தேடிக்கண்டுபிடித்து அவர் கணித ஆசிரியர் என கண்டு பிடித்து ஆச்சரியமுற்று இருக்கிறார். இவ்வாறாக உலக இலக்கியங்களில் ஒரு சிறு பகுதியே தன் வாசகனுக்கு கடத்திய மகிழ்வுடன் இந்த நூலை செய்திருக்கிறார். உலக இலக்கியத்தில் அறிமுகம் தேடுபவர்கள் ஆரம்ப கட்ட வாசிப்பாக இந்த நூலை வாசிப்பது மிகவும் சிறந்தது.

## தாயினுஞ் சிறந்தது தமிழே!



தாயினுஞ் சிறந்தது தமிழே தரணியி லுயர்ந்தது தமிழே
வாயுடன் பிறந்தது தமிழே வாழ்வெல்லாந் தொடர்வது தமிழே.

பாலூட்டி வளர்த்ததும் தமிழே தாலாட்டி வளர்த்ததும் தமிழே
பாராட்டி வளர்த்ததும் தமிழே சீராட்டி வளர்த்ததும் தமிழே

தேம்படு மழலையுந் தமிழே திருந்திய வுரைகளும் தமிழே
தேம்பி யழுததுந் தமிழே தேவையைக் கேட்டதும் தமிழே

முந்தி நினைந்தலும் தமிழே முந்தி மொழிந்ததும் தமிழே
குந்தி யெழுந்ததும் தமிழே குலவி மகிழ்ந்ததுந் தமிழே

பயன்படு கல்வியும் தமிழே பணிபெறப் படுவதும் தமிழே
அயன்மொழி பயில்வதும் தமிழே அயன்மொழி நினைவதும் தமிழே

குலமெனப் படுவதும் தமிழே கோவெனப் படுவதும் தமிழே
நலமெனப் படுவதும் தமிழே நாடெனப் படுவதும் தமிழே

தனிமொழி யானதும் தமிழே தாய்மொழி யானதும் தமிழே
கனிமொழி யானதும் தமிழே கலைமொழி யானதும் தமிழே!

– மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர்

# மழை!

பால்வெளியில் பயணிக்கும் மேகங்கள்
இளந்தென்றலின் சுகத்தினில் சூலுற்று
பெற்றெடுத்த பிள்ளையே மழை!
பனிக்குடமாய் பாரினில் வீழ்ந்து
தண்ணீர் குடத்தின் தாகம் தீர்க்க வந்திடு;
வகுடெடுத்த வயல்வெளிகள் தழைக்கவும்;
வாய்பிளந்த கால்வாய்கள் கரைதொடவும்;
நீரோடைகள் நின்மயங்கி நீராடவும்;
பரணி ஜோதியாய் தரணியில் தரித்துவிடு;
இலை குளிப்பதை இந்த இளமை கண்டு
உவமை செய்ய ஓர் ஓவியம் தந்திடு!
விதைகளினால் விரிசல்கள் விளைநிலமாக
உன் விளையாட்டை நிகழ்த்திவிடு;
திசையறியா தென்றலின் தூதே;
தேவலோக மன்மதனின் மாதே!
முத்தத்திற்கும் மணம் உண்டென்று
நீ மண்ணிற்கு பரிமாறும் கணம் உணர்ந்தேன்!
மணத்தினால் மனம் நிறைந்து விட்டது;
கால மாற்றத்தினால் இனம் மறைந்து விட்டது;
வறுமைக் கொடி வந்ததறியாமல் போக்கிவிட்டு;
பசுமைக் கொடியை பார் எங்கும் பறக்கவிடு;
அண்டத்தின் அழுகையை அவனறியாமல் துடைத்துவிடு;
ஓய்வறியா உழவர்களின் உழைப்பிற்கு;
மாதம் ஒருமுறையாவது இரக்கம் காட்டு;
உன்னால் ஏற்ற இறக்கம் இல்லையென்று
இந்த உலகினிற்கு பறைசாற்று;
மனித இனத்தை மன்னித்து மாண்புறச் செய்திடு
மறுவாழ்வுக்கு மலை(மை)ப் பூக்களால் வாழ்த்திடு!



**ர.அழகுபாண்டி**
இளங்கலை இரண்டாமாண்டு

# ஒப்பீட்டு நோக்கில் புறப்பொருள் வெண்பாமாலையின் வெட்சிப்படலமும் சிலப்பதிகார வேட்டுவவரிப் பாடல்களும்



**கோ.ஜா. நான்சி எல்பின்**

இளம் இலக்கியம் இரண்டாம் ஆண்டு

தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்றிலக்கணம் குறித்து விரிவாக எடுத்துரைக்கிறது. பன்னிரு படலத்தையும் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தையும் பின்பற்றி எழுதப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலையின் வெட்சிப் படலத்தையும் சிலப்பதிகார மதுரை காண்டத்தின் வேட்டுவவரி காதையையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வெட்சித்திணையும் வேட்டுவ வரியும்

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணையாகும். இக்குறிஞ்சி நிலத்திற்குரியது வெட்சிப் பூவாகும். இது சிவந்த நிறத்தை உடையது. இம்மலைநாட்டு பூவை சூடிய மறவர் மலைகளிலும் பிற நிலப் பகுதிகளிலும் மேய்ந்து கொண்டிருக்கும் ஆநிரைகளை பிறர் அறியாதவாறு கவர்ந்து வருவர், இவ்வொழுக்கத்தை முன்னோர் வெட்சித் திணை என வழங்கினர். வெற்றிக்குரிய ஆநிரை கவர்தலானது மன்னனின் கட்டளையை ஏற்றும் மன்னனின் ஏவுதல் இன்றியும் நடைபெறும். இவற்றை புறப்பொருள் வெண்பாமாலையின் கண் அமைந்த வெட்சிப்படலம் வெட்சித் திணை பற்றியும் அதன்கண் அமைந்த 19 வகையான துறைகள் பற்றியும் பேசுகிறது.

**”வெட்சி, வெட்சி அரவம், விரிச்சி, செலவு,**
**வேயே, புறத்திறை, ஊர்கொலை, ஆகோள்,**
**பூசல் மாற்றே, புகழ்சுரத் துய்த்தல்,**
**தலைத்தோற் றம்மே, தந்துநிறை, பாதீடு,**
**உண்டாட்டு, உயர்கொடை, புலனறி சிறப்பே,**
**பிள்ளை வழக்கே, பெருந்துடி நிலையே,**
**கொற்றவை நிலையே, வெறியாட்டு உளப்பட**
**எட்டு இரண்டு ஏனை நான்கொடு தொகைஇ**
**வெட்சியும் வெட்சித் துறையும் ஆகும்.”** (பு.வெ.மாலை நூ : 1)

ஆகோள் துறையில் பசுக்களைக் கன்றுடன் கவர்ந்து வருதல் என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிட்டுள்ளது. சிற்றூரில் உள்ள ஒருவன் பசு கூட்டத்தை கவர்ந்து வர

கொற்றவை தேவியின் துணையோடு செல்லுதல் இது வேட்டுவ வரி உணர்த்தும் செய்தி. உண்டாட்டுத் துறையில் மறவர் தங்கள் வெற்றியை கொண்டாடும் வகையில் கள் உண்டு மகிழ்வர். வேட்டுவ வரியில் கல்லினை விற்பவன் முன் வாங்கிய கடன் தரப்படாததால் வீரனுக்கு கள் தர மறுக்க அதை பொறுத்துக் கொள்ள முடியாத அவன் பகைவர் பசு கூட்டத்தைக் கவர்ந்து வர புறப்படுவான் அப்போது தேவி கொற்றவையும் வில்லேந்திய வீரன் முன் செல்வாள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடைத்துறையில் கவர்ந்து வந்த ஆநிரைகளை ஊர்மக்கள் அனைவருக்கும் பகிர்ந்து கொடுப்பர். வேட்டுவவரியில் சோதிடர், ஒற்றன், மறத்தியர், முதுமையான மறவர் முதலியவருக்கு பகிர்ந்து கொடுத்தனர் என்ற செய்தி சுட்டப்பட்டு இருக்கிறது. வெற்றிக்கு காரணமாக விளங்கும் கொற்றவைக்கு வழிபாடு செய்தல் கொற்றவை நிலைத்துறை என புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.. இதே போல் பசு கூட்டங்களை கவர்ந்து வந்த மறவர்கள் தங்கள் வெற்றிக்கு விலையாக தருவது தங்களது ரத்தமும் சதையுமே ஆகும் என வேட்டுவவரி குறிப்பிடுகிறது. புறப்பொருள் வெண்பாமாலையில் வெறியாட்டுத் துறையில் மறக்குடி மகளிர் தம் கணவர் மேற்கொண்ட தொழில் நன்றாக முடிய வேண்டும் என எண்ணினர் அதற்காக வேலோடு கூடி வள்ளி கூத்து ஆடுவர் இதனை,

‘‘வால் இழையோர் வினை முடிய
வேலனொடு வெறி ஆடின்று ’’ (பு.வெ.மாலை.கொளு.1:20)

என விளக்குகிறது. சிலப்பதிகார வேட்டுவ வரியில் கொற்றவை தேவியை வேண்டிக்கொண்டு கொன்றையும் துளசியும் சேர கட்டிய மலர்கள் நெருங்க தொடுத்த மாலையைத் தோல் மேல் அணிந்து அரக்கர்கள் வருத்தமும் தேவர்கள் மகிழவும் மறக்குடி மகளிர் மரக்கால் கூத்து நடத்துவர் என்பதை,

**”அசுரர் வாட அமரர்க்கு ஆடிய**
**குமரி கோலத்து கூத்து உள்படுமே”** ( சிலம்பு 12 :114 – 115)

எனும் இச் சிலப்பதிகார வரிகள் உணர்த்துவது நோக்கத்தக்கது. பாதச் சிலம்பும், வளையும், மேகலையும் ஒலி செய்து முழங்க மாயம் புரிவதில் வல்லவர்களான வாளேந்திய அரக்கர்கள் அழிந்து ஒழிய கொற்றவை மரக்கால் மேல் நின்று, வாள் கூத்து நிகழ்த்தினாள் என்ற செய்தியை வேட்டுவவரிப் பாடல்கள் மூலம் அறியலாம்.

**ஆநிரை கவர்தல்**

பகைவருடைய ஆக்களை கண்களுடன் கவர்வது ’ஆகோள்’ துறை ஆகும்.

**” வென்று ஆர்த்து விறல் மறவர்**
**கன்றோடும் ஆதழீ இயன்று”** (பு.வெ.மாலை.கொளு.1:7)

பகைவர்களை முற்றிலுமாக ஒழித்தும் பெற்ற வெற்றியை உடையவர் வெட்சி மறவர். அவர்கள் வெற்றி பெற்ற களிப்பால் ஆநிரைகளுடன் கன்றுகளையும் கைப்பற்றுவர், இது புறப்பொருள் வெண்பாமாலை கூறும் செய்தி. அச்சம் தரும் அழகிய சிற்றூரில் உள்ள ஒருவன் ஆநிரைகளை கவர்ந்து செல்ல கூடும் என வேட்டுவவரியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"வெட்சி மலர் புனைய வெள் வாள் உழத்தியும் வேண்டும் போலும்"**

( சிலம்பு 12 :121)

வெட்சி மலர் மாலையை மெல்லிய வாள் ஏந்திய கொற்றவையும் விரும்புவாள் என்பதனை மேற்கண்ட வழி மூலம் அறியலாம்.

## மறவர்களின் கொடை

கொடை என்பது தன்னிடம் உள்ள பொருளை மற்றவர்களுக்கு கொடுத்து உதவும் பண்பாகும். இதனை புறப்பொருள் வெண்பாமாலை,

**"ஈண்டியநிரை ஒழிவின்றி**

**வேண்டியோர்க்கு விரும்பி வீசின்று"** (பு.வெ.மாலை.கொளு.1:15)

கொடைத்துறையில் மறவர்கள் தம்முடைய திறமைக்கேற்ப தான் கைப்பற்றிய ஆநிரைகளை பகிர்ந்து கொடுப்பர். இதனை வேட்டுவ வரியில்

**"கொல்லன் துடியன் கொளை புணர் சீர் வல்ல**

**நல் யாழ் பாணர்-தம் முன்றில் நிறைந்தன"** ( சிலம்பு 12 : 130 - 131)

கொல்லர், பறை கொட்டுபவர், பாணர், ஒற்றன், சோதிடர், முதுமையான மறவர், மறத்தியர் முதலியோருக்கு மறவர்கள் தாங்கள் கவர்ந்து வந்த ஆநிரைகளை பகிர்ந்து கொடுத்துள்ளார்கள் என்பதனை அறிய முடிகிறது.

## கொற்றவை வழிபாடும் வீரபழியும்

வெற்றிக்கு காரணமாக விளங்குவதாக நம்பப்பட்ட கொற்றவை தேவியைப் புகழ்ந்து போற்றுவதே கொற்றவை நிலைத் துறை ஆகும். இதனை,

**"ஒளியின் நீங்கா விறல்படை யோள்**

**அளியின் நீங்கா அருள் உரைத்தன்று"** (பு.வெ.மாலை.கொளு.1:19)

அரிமாவின் உருவமும், பாய்ந்து செல்கின்ற ஆண் மானை உறுதியாகவும், பேய் கூட்டத்தை படையாகவும் உடையவள் கொற்றவை. அத்தகைய கொற்றவை தேவி வெற்றி அளித்த காரணத்தால் அவளைப் போற்றி மறவர்கள் வணங்குவார்கள் என்பர். வெற்றிக்கு காரணமாக விளங்கும் கொற்றவை தேவிக்கு வீரர்கள் தங்கள் கழுத்து அறுபட சிந்தும்

ரத்தம் சதை போன்றவற்றை பலியாகச் செலுத்துவர். பறையும், மத்தளமும், கொம்பும் ஒலி செய்து முழங்க வருகின்ற புலிப்போன்ற மறவர்கள் நள்ளிரவுக் காலத்தில் கொற்றவைக்கு வீரபழியாக குருதியைக் கொட்டுவர் என்பதை,

**”மிடறு உகு குருதி கொள் விறல் தரு விலையே**
**அணி முடி அமரர் தம் அரசொடு பணிதரு**
**மணி உருவினை நின் மலர் அடி தொழுதேம்**
**கண நிரை பெறு விறல் எயின் இடு கடன் இது**
**நிணன் உகு குருதி கொள் நிகர் அடு விலையே**
**துடியொடு சிறு பறை வயிரொடு துவைசெய**
**வெடி பட வருபவர் எயினர்கள் அரை இருள்**
**அடு புலி அனையவர் குமரி நின் அடி தொடு**
**படு கடன் இது உகு பலி முக மடையே”** ( சிலம்பு 12 : 143 - 151)

சிலப்பதிகார வேட்டுவவரிப் பாடல் வரிகள் பதிவு செய்வதன் மூலம் அறியலாம்.

முடிவுரை

தமிழர்களுடைய வாழ்வியல் கருவூலமாக புறம் சார்ந்த வீரம், கொடை போன்ற பண்பு நலன்கள் பேசப்படுகின்றன. அவற்றுக்கு இலக்கணம் கூறும் புறப்பொருள் வெண்பாமாலையின் வெட்சிப்படல செய்திகளை சிலப்பதிகார வேட்டுவரிப் பாடல்களோடு ஒப்பிட்டு ஆய்ந்ததன் மூலம் தமிழ் மக்கள் பண்பாட்டு ரீதியிலான மறத்திலும் கொடையிலும் வழிபாட்டு முறையிலும் சிறந்த பாங்கினை அறிய இயலும்.



# கருவாச்சியின் மாமன்



இரா. புனிதவள்ளி,
முதுகலை முதலாம் ஆண்டு

மருத்துவமனையில் ஒரு பெண் குழந்தை பிறந்து அழுதுக்கொண்டிருந்தது மூன்றாவதும் தனக்குப் பெண் குழந்தை பிறந்ததால் அந்தக் குழந்தையை அவளின் தாய் தூக்கி பால்கூட கொடுக்கவில்லை. பெற்ற தாயே வேண்டாம் என்று தொட மறுத்த அக்குழந்தையை ஒரு கையில் ஏந்தி முதல் தாயானான் அவளின் தாய்மாமன் அருளானந்தம்.

"கருவாச்சி என்ன மாதிரியே இருக்காள்லம்மா" என்று கூறி அக்குழந்தையை முத்தமிட்டான். அவ்விருவரின் அந்த அழகான உறவு அன்றிலிருந்து தொடங்கியது. அருள் ஒரு உழவுக் குடும்பத்தில் மூன்றாவது பையனாகப் பிறந்தவன் உடன்பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்களும் ஒரு தங்கையும். அருளையும் அவனது தங்கையையும் படிக்க வைக்க அவனது வீட்டில் மிகவும் சிரமப்பட்டனர். அப்பா இலையறுத்தும் அம்மா கூலி வேலை செய்தும் அண்ணன்கள் பெயிண்ட் வேலைக்குச் சென்றும் படிக்க வைத்தனர். அருளும் அவனது தங்கையும் நன்றாகப் படித்தனர். அருள் நன்கு படிக்கக் கூடிய திறமைசாலி ஆயினும் தனியார் கல்லூரியில் பணிபுரிந்ததால் மிகுதியாக வேலை செய்தும் அவனுக்கு குறைவான ஊதியமே கிடைத்தது. இதனால் தனியார் கல்லூரியில் பணிபுரிந்து கொண்டே அரசுப் பணித் தேர்வுக்காகப் படித்துக் கொண்டே இருந்தான் அரசுப்பணித் தேர்வுகளை எழுதிக் கொண்டே இருந்தான் பலமுறை அவனுக்குச் சொற்ப மதிப்பெண்களில் அரசுப்பணி வாய்ப்பு தவறிக்கொண்டே இருந்தது. குடும்ப வறுமையும் அவனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. எத்தனை வலிகள் இருந்தாலும் அவனின் முகத்தில் ஒரு நாளும் சிரிப்பு குறையவில்லை. நூறு ரூபாய் இருந்தாலும் இல்லையென்று யாராவது கேட்டால் வழங்கிவிட்டு வீட்டிற்கு வருவான் அப்படிப்பட்ட பண்பாளன். இதற்கிடையில் அருளின் தங்கைக்கு அவளின் காதலனுடன் திருமணம் முடிந்தது. மாப்பிள்ளை மிகவும் நல்ல பையன் ஆயினும் மாப்பிள்ளை வீட்டில் தங்கையை ஏற்றுக் கொள்ளவில்லை காரணம் மாப்பிள்ளை மிகவும் வசதியான குடும்பத்தவர். இவளோ ஏழை வீட்டுப்பெண் இதனால் அவள் அங்கு மிகவும் துயருற்றாள்.

அருளின் தங்கைக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறக்கிறது. அவளின் மூன்றாவது பெண் குழந்தையே அருளின் செல்லமருமகளான கருவாச்சி. மற்ற இரண்டு குழந்தைகளும் அருளின் மச்சான் வீட்டில் வளர்ந்தார்கள் ஆனால் கருவாச்சி மட்டும் அருளுடனே வளர்ந்தாள். மச்சான் வீட்டில் சண்டைகள் காரணமாக அருளின் தங்கை கருவாச்சியை

மட்டும் தனியாகத் தூக்கி வந்து வளர்த்தாள். தனியாக அவளை வளர்ப்பதற்கு மிகவும் சிரமப்பட்டாள். அருள் ஒருநாள் அவளைக் காண வரும்போது கருவாச்சியை அவன் தங்கை அடித்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் பிள்ளையப்போட்டு இப்படி அடிக்கிற?" என்றான் அருள்.

"பின்ன என்னணே என்கிட்ட பால்வாங்கக் கூட காசு இல்லை. தண்ணீல டீதூளையும் சீனியையும் போட்டுக் குடுத்தேன். குடிக்கமாட்டுது கழுத" என்று கூறியபடி அழத் தொடங்கினாள். அந்த பச்சிளம் குழந்தைக்கு அவள்தாயின் வறுமை தெரியவில்லை பாவம்.

"ஏம்மா அழுகுற நான் இருக்கேன்ல ,இவ என் மருமக இல்ல மக, என் கருவாச்சிய நானேவளத்துக்கிறேன் என்று கூறி கருவாச்சியைத்தூக்கி வந்து தனது அம்மாவிடம் கொடுத்து இன்னயிலிருந்து இவ நம்மகூட தா இருப்பா. நம்மகூட தான் வளர்வா என்று கூறினான் அருள் அன்றிலிருந்து கருவாச்சி அருளின் வீட்டிலேயே வளர்கிறாள். அருளே அவளுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருக்கிறான்

கருவாச்சி தனது ஐந்து வயது வரை அருளின் அரவணைப்பில் தான் வளர்ந்தாள். பின்னர் அந்தக் குழந்தையைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று அருளின் தங்கை குழந்தையைத் தன்னிடம் கூட்டி வரச் சொன்னார். அருளும் அவளைக் கூட்டிக் கொண்டு தங்கையின் வீட்டில் விட்டுவிட்டு வந்து அழுகிறான். அந்தக் குழந்தையும் இரவு முழுவதும் சாப்பிடாமல்,

"மாமா மாமா நான் மாமாகிட்ட போறேன்" என்று கூறி அழுதுகொண்டே இருக்கிறது.

ஆயினும். இவர்கள் உறவு அன்றுடன் முடிந்துவிட வில்லை. வார இறுதியானால் அருள் அவளை தனது வீட்டிற்கு அழைத்து வந்து தன்னுடன் வைத்துக் கொண்டு திங்கட்கிழமை மீண்டும் தனது தங்கை வீட்டிற்கு அனுப்பி வைத்துவிடுவார் அவளின் காதுகுத்தும் மூன்றாவது பிள்ளை என்பதால் முன்றாவது தாய்மாமனான அருளின் மடியிலேயே நடந்தது பணம் இல்லாத போதிலும், கருவாச்சிக்கு துணி எடுக்க வேண்டும் என்றால் விலையுயர்ந்ததாக எடுப்பார். அதே தனக்கு குறைந்தவிலையில் எடுப்பார். தான் வறுமையில் வாடினாலும் கருவாச்சியை வறுமை தெரியாது வளர்த்தார். தனது தங்கை வீட்டில் பொன்னி அரிசி சாப்பிட்டு வளர்ந்த கருவாச்சிக்கு வார இறுதியில் அருள்வீட்டில் சாப்பிடும் ரேசன் அரிசி சேரவில்லை. இதனை அறிந்த அருள் கருவாச்சிக்காக கூடுதல் நேரம் வேலை செய்து அந்த பணத்தில் பொன்னி அரிசி வாங்கி சமைத்தார். எங்குச் சென்றாலும் அருள். அவரின் அம்மா, கருவாச்சி என மூவரும் எப்போதும் ஒன்றாகவே செல்வார்கள். இந்நிலை கருவாச்சி பெரிய மனுசி ஆன பிறகும் தொடர்ந்தது.

"இனி அவ பெரிய மனுசி ஆயிட்டா. இனி அவள அங்கயும் இங்கயும் கூட்டிட்டுப்போகாதண்ணே" என்றாள் அருளின் தங்கை .

“அவ பெரிய மனுசி ஆனாலும் எனக்கு அவ குழந்தைதாம்மா" என்றான் அருள்.

இப்படியே வாழ்க்கை நகர்ந்து கொண்டு போகிறது. இந்நிலையில் கருவாச்சிக்காக மட்டும் இவ்வளவு நாள் வாழ்ந்த அருள் மகளைத் தாண்டி வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறார் அது அருளின் அக்கா மகள் அவளுக்கும் அருள் மீதுபிரியம் அவள் மீது அருளும் உயிரையே வைத்து இருந்தான். அவள் தனது வீட்டிற்கு வாழவரும் போது அவளுக்கு சங்கடங்கள் நேரக் கூடாதென தனது வீட்டில் குளியலறையும் கழிவறையும் கட்டினான் அருள். ஆனால் அவனின் அக்கா கணவர் அருளுக்கு அரசு வேலை இல்லையென இவர்கள் திருமணத்தை மறுத்துவிட்டார் இதனால் அருள் மிகுந்த மன வேதனையுற்று எனக்கு திருமணம் என்ற ஒன்று தேவையில்லை. எனது தங்கையின் மூன்றாவது மகளை வளர்த்துக் கொண்டே காலமுழுவதும் ஓட்டிவிடுகிறேன் என்று கூறினான். ஓராண்டு கழித்து அருள் மீண்டும் அரசுப்பணிக்காக படிக்கத் தொடங்கினான். அருளின் அம்மா அருளைத் திருமணம் செய்ய கட்டாயப்படுத்தினர். அருள் மறுத்துவிட்டான். இவன் யார் சொன்னாலும் கேட்க மாட்டான் என்று அவனின் ஆசை மகள் கருவாச்சியையே சொல்லச் சொன்னார்கள். அவள் சொன்னவுடனேயே சரி என்று சொன்னான் அருள் தனது மற்றொரு அக்கா மகளைத் திருமணம் செய்கிறான் அவனுக்கு ஓர் ஆண்குழந்தையும் பிறந்தது.அதன் பின்னர் அருள் அரசுப்பணித் தேர்வு ஒன்றையும் எழுதிமுடித்தான் இந்த முறை கண்டிப்பாக அரசுப்பணித் தேர்வில் வெற்றிபெற்று வேலைக்குச் சென்றுவிடுவேன் என்ற நம்பிக்கையில் இருந்தான். அவர் வேலை செய்தக் கல்லூரியில் ஒரு சிறந்த ஆசிரியராக இருந்தார். அவரைச் சுற்றி எப்போதும் மாணவர்கள் இருந்துகொண்டே இருப்பார்கள் ஒரு நண்பனைப் போல பேசிப் பழகுவார் ஒருநாள் அருளின் மாணவன் ஊரில் திருவிழா. அருளும் அவன் அம்மாவும் அந்தத் திருவிழாவிற்குச் சென்றார்கள். கருவாச்சி அவர்களுடன் செல்லவில்லை. எப்போதும் சேர்ந்து செல்லக்கூடிய மூவரும் அன்று கருவாச்சியை மட்டும் விட்டுச் சென்றார்கள். என்னவென்று தெரியவில்லை அன்று தனது மகளை அழைத்துச் செல்ல வேண்டாம் என்று கண்டித்துக் கூறிவிட்டார் கருவாச்சியின் அப்பா.

அடுத்தநாள் அரசுப்பணித் தேர்வு முடிவுகள் வெளியாகின - அருளின் வீட்டிற்கு ஒரு கடிதம் வருகிறது.அவர் தேர்ச்சி பெற்றுவிட்டார் ஒரு வாரம் கழித்து வேலையில் சேர வேண்டும் என்று அந்த கடிதத்தில் இருந்தது. அந்தக் கடிதம் கண்ணீரில் நனைந்தது. ஆனால் நீங்கள் எண்ணுவது போல் ஆனந்த கண்ணீரில் அன்று. அந்த குடும்பத்தினரின் துக்கக் கண்ணீரில். அருளும் அவன் தாயும் திருவிழா முடிந்து வரும்வழியில் லாரி ஒன்றில்

மோதி இறந்து விடுகின்றனர். "மாமா மாமா" என்று கருவாச்சி அழுத வண்ணமே இருக்கிறாள்

"ஆத்தாளும் மகனும் எங்க போனாலும் ஒன்னாத்தான் போவாங்க. எப்பவும் அருள் அவன் ஆத்தாள தனியாவே விடமாட்டான்" என்று ஊரில் உள்ளோர் அடிக்கடி சொல்லுவார்கள் . அது போலவே சொர்க்கத்திற்கும் இருவரும் ஒன்றாகவே சென்றனர் ஆனால், கருவாச்சியை மட்டும் அன்று விட்டுசென்றதன் காரணம் என்னவோ.

## காமராசர்



எண்ணமோ உயர்வு

எளிமையோ வாழ்வு

கல்வியறிவோ குறைவு – ஆனால்

காலூன்றா துறையோ குறைவு

**ஜா.விஜயராகவன்**

இளம் இலக்கியம் மூன்றாமாண்டு

## நட்பு

நம் கண்களை விட்டு

ஓடிச் செல்லும்

கண்ணீர் துளிகள்



# மீராவின் 'ஊசிகள்' எனும் கவிதைத் தொகுப்பில் எள்ளல்கள்



**ம.யோக ஸ்ரீ**

இளங்கலை இரண்டாமாண்டு

மனித சமூகம், அறிவியலில் எவ்வளவோ சாதனை புரிந்து முன்னேற்றம் கண்டிருக்கலாம். ஏன் நிலவில் கூடக் காலடி வைத்திருக்கலாம். ஆனாலும் அடிப்படையான மனித உணர்வு என்பது என்றென்றும் நகைச்சுவையுடன் மனதில் ஒட்டி உறவாடி கொண்டு தான் இருக்கிறது. அப்படிப்பட்ட நகைச்சுவையைப் பற்றி மகாத்மா காந்தியடிகள் "நகைச்சுவை இல்லை என்றால் வாழ்க்கையில் எப்பொழுதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" என்று கூறினார். தனி மனித வாழ்வில் மட்டுமின்றி வாழ்வின் படப்பிடிப்பான இலக்கியத்திலும் நகைச்சுவைக்கு முதன்மையான ஓர் இடம் உண்டு. ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் எண் வகைச் சுவைகளை பட்டியலிடும் போது, நகைச்சுவைக்கு முதலிடம் தந்து எள்ளல், இளமை, பேதைமை, மடம் என்ற நான்கின் அடிப்படையில் நகைச்சுவை பிறக்கும் என குறிப்பிட்டுள்ளார். வான்புகழ் வள்ளுவரும் 'இடுக்கண் வருங்கால் நகுக' என குறிப்பிட்டுள்ளார். ஆகவே, மீராவின் 'ஊசிகள்' எனும் கவிதை தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் எள்ளல் உணர்வை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மீரா - அறிமுகம்

மீரா கவிதையைச் சுவைப்பவர்களின் நெஞ்சில் இன்பத் தேனைப் பாய்ச்சுபவர். இருபதாம் நூற்றாண்டு தமிழ் கவிதை வரலாற்றில் தமக்கென ஒரு தனி இடத்தை தேடிக் கொண்டவர். மதுரையில் உள்ள 'தீந்தமிழ் தியாகராசர் கல்லூரி' உருவாக்கிய கவிதை பரம்பரையில் முன்வரிசையில் மீராவுக்கு ஓர் இடம் உண்டு. தமிழ் கவிதை உலகில் மீராவை பரவலாக அறியச் செய்த படைப்பு 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்'. அங்கத கவிதை பாடுவதில் வல்லவர் மீரா என்பதற்கு அவரது ஊசிகள் எனும் கவிதை தொகுப்பு சான்றாகும். ஈழத்து மகாகவியின் குறும்பாக்களை அடியொற்றி மீரா படைத்து தந்திருக்கும் கவிதை நூல் 'குக்கூ'. கவிக்கோ அப்துல் ரகுமானுக்கு முன்பாக 'ஜூனியர் விகடன்' இதழில் வாரந்தோறும் குறுங்கட்டுரை எழுதும் மரபினைத் தொடங்கி வைத்த பெருமையும் மீராவுக்கு உண்டு. தமிழ் கவிதை வரலாற்றை மீட்டுருவாக்கும் செய்த மாபெரும் சிந்தனையாளர் மீரா என்றால் அது மிகையாகாது. ஒரு நகைச்சுவையாளர் என்ற நோக்கில் மீராவின் 'ஊசிகள்' கவிதையில் வெளிப்படும் எள்ளல் சுவையைக் காண்போம்.

**அங்கதம்**

ஒரு தவறை சுட்டிக்காட்டி கடுமையாக பேசும்போது நகைச்சுவை கலந்து வெளிப்படுத்துவதே அங்கதமாகும். "கேலி தன்மையை படமாகவோ, குறியீடாகவோ சொல்லி, கேட்போர் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பது அங்கதத்தின் தன்மையாகும்". இது அரசியல் அங்கதம், சமுதாய அங்கதம், தனி மனித அங்கதம் பல வகைப்படும்.

**அரசியல்**

இன்றைய காலகட்ட அரசியல் விடயங்களை எள்ளலுடன் எதார்த்தமாக எடுத்துரைப்பதில் தனித்துவம் பெற்றவர் மீரா. வேகம் என்ற கவிதையில்,

**"எங்கள் ஊர் எம் .எல் .ஏ**
**ஏழு மாதத்தில்**
**எட்டு தடவை**
**கட்சி மாறினார்**
**மின்னல் வேகம்**
**என்ன வேகம்?" (ப . 15)**

தன் சுயநலத்திற்காக அடிக்கடி கட்சி மாறும் எம்.எல்.ஏ வின் நிலையைக் கவிஞர் பதிவு செய்திருப்பது இன்றைய காலச் சூழலிலும் ஒப்பு நோக்கத்தக்கது. அரசியல்வாதிகள் வேகம் காட்டுவது நாட்டை முன்னேற்றுவதில் அல்ல; வறுமையை ஓட ஓட விரட்டுவதில் அல்ல, தொகுதியை வளப்படுத்துவதில் அல்ல; அவர்கள் கட்சி விட்டு கட்சி தாவுவதில் தான் வேகம் காட்டுகிறார்கள். அதுவும் ஏழு மாதத்தில் எட்டு தடவை மின்னல் வேகத்தில் கட்சி மாறுகிறார்கள். இன்னும் கூடுதலாகக் கட்சிகள் இருந்திருந்தால் அவர்கள் இன்னும் வேகம் காட்டி இருப்பார்கள் என்று எள்ளலோடு பதிவு செய்துள்ளார்.

**வறுமை**

நாகரிகம் வளர்ந்தாலும் பொருளாதார வளர்ச்சி பெற்றாலும் வறுமை என்பது நீக்கவியலா அவலமாக உள்ளது. அரசியல்வாதி மேடையில் வெற்று வார்த்தைகளால் முழங்கி, செயல் வேறாக இருப்பதை பதிவு செய்யும்போது,

**"எட்டு மாதமாய்**
**எங்கள் தலைவர்**
**தெருவில் நின்று**
**செழிக்கச் செய்தார்**
**முழக்கம் ....**
**வறுமை**

வெளியே றிற்றா?
விரைவாய்....?
வறுமை
வேக வேகமாய்
வெளியே றிற்று?
பரட்டைத் தலையும்
எலும்பும் தோலும்
கிழிந்த கந்தையுமாக!" (ப . 18)

எங்கள் தலைவர் எட்டு மாதமாய் தெருவில் நின்று முழக்கம் செய்தார். வறுமையே வெளியேறு என்று. நேற்று செட்டியார் வீட்டு திருமணத்தின் பந்தியில் எட்டி உதைத்தார் வறுமை வேகவேகமாக வெளியேறியது. அரசியல்வாதிகள் வறுமையை வெளியேற்றுவோம் என மேடையில் பேசி பின், வறுமையில் உள்ள மக்களை வஞ்சிக்கின்றனர் என மீரா எள்ளல் தன்மையோடு பதிவு செய்துள்ளார்.

**சுரண்டல்**

அனைத்துத் துறைகளிலும் கையூட்டு என்பது குற்றமற்ற சாதாரணமான செயல்தானோ என்று அஞ்சும் அளவிற்கு இன்று பெருகிவிட்டது. இலஞ்சம் வாங்குபவர்களைக் காட்டிலும் கொடுப்பது அதிகமாகிவிட்டது. இலஞ்சம் வாங்கி ஊழல் செய்த அரசியல்வாதி பதவி இல்லா காலத்தில் உள்ள மனநிலையை,

"ஆராவமுதன்
அமைச்சர் பதவியை
இழந்து வருந்தி
இருந்த ஓர் இரவில்
அருகில் தூங்கிய
ஆசை மனைவியைச்
சும்மா சும்மா
சுரண்டலானார்
அம்மா கேட்டார் ஆத்திரத்தில்:
ஏன் தான் உங்களுக்கு
இன்னும் அந்தப்
பொல்லாப் பழக்கம் போகவில்லையோ?" (ப . 21)

'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' எனும் பழமொழிக்கேற்ப ஆராவமுதன் பதவியில் இருந்தபோது சுரண்டுவதைப் போல பதவியை இழந்த பிறகு இரவில் அருகில் தூங்கிய மனைவியை சும்மா சும்மா சுரண்டினார். இதனால் ஆத்திரம் அடைந்த மனைவி இந்த

பொல்லாத பழக்கம் இன்னும் உங்களை விட்டுப் போகவில்லையே என்று கூறினாள் என எள்ளல் தொனிக்க பதிவு செய்கிறார் கவிஞர்.

**காதல்**

காதல் என்பது உயிரின் இயற்கை. காதலைப் பற்றி எழுதாத கவிஞரே இல்லை எனலாம். தன் உள்ளத்து உணர்வுகளை தலைவனோ தலைவியோ நேரில் கூற ஐயப்பட்டு கவிதையாக வெளிப்படுத்துவது இன்றைய மரபாக உள்ளது. அவ்வகையில் கவிஞர் எழுதியுள்ள காதல் பற்றிய கவிதைகளிலும் நகைச்சுவை வெளிப்படுத்துவதை காணலாம்.

**"காதல் என்ன**
**கத்திரிக் காயா'**
**என்ற தொடர்கதை**
**இரவில் எழுதிய**
**வாணி மணாளன்**
**பகலில்**
**வாரச் சந்தையில்**
**கிலோ விலை ரூபாய்**
**இரண்டெனக் கேட்டதும்**
**அயர்ந்தார்:**
……….
**'அத்தனை மலிவாய்**
**அள்ளிக் கொள்ள**
**கத்திரிக்காய் என்ன**
**காதலா?'.... (ப . 20)**

வாணி மணாளன் இரவில் 'காதல் என்ன கத்திரிக்காயா' என்று தொடர்கதையை எழுதிவிட்டு, பகலில் வாரச்சந்தையில் கத்திரிக்காய் கிலோ இரண்டு ரூபாய் என்றதும் அதிர்ச்சி அடைந்தான். உடனே காய்கறிக்காரன் கடுப்பில், அவ்வளவு மலிவாக அள்ளிக் கொள்ள கத்திரிக்காய் என்ன காதலா என காதலை விட உயர்ந்தது கத்திரிக்காயே என கூறி நடைமுறை வாழ்வின் விலைவாசி உயர்வையும் எளிய மக்களின் வாழ்வியலும் குறிப்பால் சுட்டியுள்ளார்.

**எச்சரிப்பு**

பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தி அவர்களது வாழ்க்கையை சூறையாடும் ஆண்கள் ஒரு பக்கம் இருக்க, ஆசையை ஏற்படுத்தி ஆண்களின் வாழ்க்கையை தடம் மாற்றி தானும் சுழியும் சில பெண்களை பற்றி கூறும் போது,

**"எச்சரிப்பலே**

**எங்கள் பட்டணப்**

பெண்கள் நல்லவர் ...
பெரிதும் நல்லவர் !
தொலைவில் வருவோர்
விலகிச் சென்றிட
உதட்டில் சாயம்
ஒளிவிட வருவார்...
உபாயம் தெரிந்தவர்
உடனே தப்பலாம்
அபாயம் அருகே
வராதீர் என்றே
………” (ப . 38)

இக்கவிதையில் உதட்டில் சாயத்தைப் பூசி கொண்ட பல குடும்பங்களின் ஆண்களை காதல் மூலம் கவர்ந்து பணத்தைக் கையாளும் பட்டணத்துப் பெண்கள் எச்சரிப்பதில் நல்லவர் என கிண்டலாக உணர்த்தியுள்ளார் மீரா.

முடிவுரை:

அரசியல் மோகம் பிடித்த தலைவர்கள் செய்யும் தவறுகளையும் பொறுப்பின்மையையும் எள்ளல் தொனிக்க எடுத்துரைத்துள்ளார். இன்றைய காதல் பற்றியும் காதல் என்ற பெயரில் நிகழும் இழிவான செயல்களையும் மீரா தன் கவிதை வழிச் சுட்டிக்காட்டியுள்ளதை அறியலாம். மீரா, ஊசிகள் எனும் இக்கவிதைத் தொகுப்பு மூலம் சமூகத்தில் நிகழும் பல்வேறு சிக்கல்களையும் எளிய நடையில் நகைச்சுவை கலந்து வெளிப்படுத்தி உள்ளமையை அவரது கவிதைகள் வழி அறியமுடிகின்றது.

**தமிழ் திங்களும் திரிபும்**

| தமிழ் | திரிபு | தமிழ் | திரிபு |
|---|---|---|---|
| **சுறவம்** | தை | **கடகம்** | ஆடி |
| **கும்பம்** | மாசி | **மடங்கல்** | ஆவணி |
| **மீனம்** | பங்குனி | **கன்னி** | புரட்டாசி |
| **மேழம்** | சித்திரை | **துலை** | ஐப்பசி |
| **விடை** | வைகாசி | **நளி** | கார்த்திகை |
| **ஆடவை** | ஆனி | **சிலை** | மார்கழி |

# திருக்குறளில் வாழ்வியல் அறம்



அ.முகமது இஸ்மாயில்
இளங்கலை இரண்டாமாண்டு

மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரை நூல் தான் திருக்குறள் ஆகும் உலகத்தின் தலைசிறந்த நூலாக திருக்குறள் போற்றப்படுகிறது இந்நூல் மக்கள் வாழ்க்கையோடு முழுக்க முழுக்க ஒன்றியதாகும் ஒவ்வொரு அதிகாரமும் மனிதனுக்கு ஒவ்வொரு அறத்தைப் போதிக்கிறது இது நாடு மொழி இனம் சமயம் கடந்து எக்காலத்திற்கும் பொருந்துவனாய் அமைந்ததால் திருக்குறள் உலகப் பொதுமறை என அழைக்கப்பட்டது. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றையும் கூறுதலில் முப்பால் எனும் பெயரை பெற்றுள்ளது. பொருளும் இன்பமும் அறத்தின் அடிப்படையில் வந்தால்தான் போற்றப்படும். அறத்தின் வழியில் வாராத பொருளும் இன்பமும் பழிக்கப்பெறும். இதனை, **"சிறப்புடை மரபிற் பொருள் மின்பமும் அறத்து வழிபடுவந் தோற்றம் போல"** என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. **"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம் புறத்த புகழும் இல"** என்னும் குறளில் அறவழியில் வாழ்வதால் வரும் பயனே இன்பம் என்கிறார். இத்தகைய அறிய அறவாழ்வினை உணர்த்தும் அறக்கருத்துகள் திருக்குறள் எங்கும் பரந்து காணக்கிடைக்கின்றன. எனினும், ஆய்வுச் சுருக்கம் கருதி திருக்குறள் என்ற கடலில் இருந்து சில துளிகளை மட்டும் தொட்டுக்காட்ட முயல்கிறேன்

## அறம் – விளக்கம்

'அறு' என்ற வினைச்சொல் அடிப்படையாகப் பிறந்ததே 'அறம்' என்ற சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல் வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து, என்ற பலவகை பொருள்கள் வழங்கி வருகின்றன இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் 'அறம்' என்னும் சொல்லிற்குப் பின் வருமாறு விளக்கம் கூறலாம் மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழு நிறை வடிவமே அறம் என்று கூறுவர். "பிறவி தோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்" என்ற ஆன்மீக விளக்கம் இதற்கு தரப்படுவதுண்டு (திருக்குறள் நீதி இலக்கியம், பக் 23).

## வாழ்வியல் அறம்

வாழ்வியல் என்றால் முறைமை அல்லது ஒழுங்கு என்றும் வாழ்தல் என்றால் சிறந்திருத்தல் என்றும் கௌரா தமிழ் அகராதி பொருள் தருகிறது. மனித வாழ்வு மாண்பு

பெற மனிதன் அறம் போற்றுதல் அவசியம். அறம் செய்க என்பது செயல் சார்ந்தது; அறம் செய்ய விரும்புவது மனம் சார்ந்தது; அறம் செய்யும் எண்ணத்தை மக்கள் மனங்களில் விதைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஔவை **"அறம் செய்ய விரும்பு"** என்று கூறியிருக்கிறார் மக்களின் மனமாசு அகற்றுவதோடு சமுதாயத்தில் அறம் ஓங்கி உயர்ந்து நீதியான சமூகம் மலரும் என்ற நல்ல நோக்கத்தைப் பதிவு செய்கிறது. மக்கள் அறத்தின் வழியில் இன்பம் துய்க்க விரும்பினால் பிறரோடு செய்யும் போரிலும் அறம் பிறழக்கூடாது என்று நம் சங்கத் தமிழர்கள் விரும்பினார்கள். இதனை புறம், **"ஆவும் ஆன்இயற் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும் பேணித் தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன் போல் புதல்வப் பெறாஅ தீரும் எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்ன அறத்தாறு நுவலும் பட்கை"** (புறநானூறு பாடல் - 9) என்று கூறுவது தமிழரின் பேரறமாகும். மேலும் மனக்கோட்டமும் ஆசையும் வெகுளியும் கடுஞ்சொல்லும் ஆகிய இந்நான்கினையும் ஒழித்து நடப்பது யாதொன்றும் அது அறமென்று சொல்லப்படும். இதனை வள்ளுவம், **"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்"** (குறள் - 35 )என்று குறிப்பிடுகின்றது

### பண்டையத் தமிழரின் வாழ்வியல் அறம்

சமூக நெறிமுறைகளை அறம் பொருள் இன்பம் என மூன்றாக பகுத்துக் கூறுவது பண்டைய தமிழ் மரபு. இதில் அறம் என்பது தலைசிறந்த ஒன்றாக விளங்கியது என்று சொன்னால் மிகையாகாது. எனவேதான் **"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு"** (தொல்காப்பியம் களவியல் நூற்பா - 1) என்று கூறுகிறது. இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் இன்பத்தை தழுவி நிற்கும் இன்ப நுகர்ச்சிக்குத் தேவைப்படுவது பொருள் அப்பொருள் அறவழியில் வரவேண்டும். இத்தகைய பண்டையத் தமிழரின் வாழ்வியல் அறநெறிபாடாகும். அறநெறியில் இல்லாமல் வரும் செல்வத்தைக் கொண்டு இன்பம் நுகர்வானாயின் அவன் இறந்தவனாகவே கருதப்படுவான். மேலும் இச்செயல் இரந்து உண்டு வாழ்வதைவிட இழிவானதாகும். எனவே தான் இத்தகைய அறவாழ்வினை மேற்கொண்டனர் இதனைக் குறுந்தொகை **"உள்ளது சிதைப்போர் உளரெனப்படாஅர் இல்லோர் வாழ்க்கை இரவினும் இளயிவு எனச் சொல்லிய வன்மை தெளியக் காட்டிச் சென்றனர் வாழி தோழி"** (குறுந்தொகை - 283 ) என்று பதிவு செய்யக் காணலாம் மேலும் பொருள் இல்லார்க்கு ஈதலே சிறந்த அறம். அதனை விடுத்துத் தான் துய்ப்பது அறம் அற்ற செயல் என்று கருதியதோடு அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தும் காட்டினர் என்பதனை **"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச் சேயவினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு அம்மா அரிவையும் வருமோ"** (குறுந்தொகை, 63 :1-3) என்ற பாடல் வரிகள்

மூலம் அற வாழ்வினை மாண்பினை அன்றைய மக்கள் வாழ்வின் தனி நாகரிகமாக மேற்கொண்டு வாழ்ந்தனர் என்ற மக்களின் உயர்ந்த பண்பாட்டினை அறிய முடிகின்றது இதனைத் தான் வள்ளுவர், **"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்துனூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு"** (குறள் 31) என்று அறத்தின் இலக்கணம் இயம்புகிறார்.

## இன்பத்தின் இருப்பிடம் வள்ளுவம்

ஒரு இல்லறம் நல்லறமாக அமைய வேண்டுமெனில் அவ்வில்லத்தில் பெண் அறம் உணர்வும் ஒழுக்கமும் நிறைந்தவளாக இருக்க வேண்டும். இதனையே வள்ளுவர், **"இல்லதன் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை "(குறள் - 53 )** என்று பெண் மாண்புடையவளானால் ஆனால் அவ்வில்லத்தில் இல்லாதது எதுவுமே இல்லை என்று உயர்த்தி காட்டும் பெண்ணின் பெருந்தகைமை குணங்கள் இன்றும் என்றும் எல்லோரும் ஏற்கத்தக்கதாகும்.

## இல்லறத்தில் நல்லறம்

"இல்லறம் இல்லையேல் நல்லறம் இல்லை" என்பர் சான்றோர் அனைவரிடத்திலும் பழகுதல், புதிதாக வரும் விருந்தினருக்கு உணவிட்டு உதவி செய்தல், எப்போதும் இனிய சொற்களையே இயம்புவது, பிறர் செய்த நன்றியை மறவாமல் மனத்தில் வைத்திருப்பது, நீதிக்கு மாறாக நடக்காமல் நடுநிலைமையிலே நடப்பது, இன்ன பிற ஆண்களும் பெண்களும் பின்பற்ற வேண்டிய இல்லற கடமைகள் என்று வள்ளுவர் வாய் மொழிவதை காணலாம். சான்றாக **"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் - 81)** என்ற குறளைக் கூறலாம் தனிமனித வாழ்வை பொருளுடைய வாழ்வாக வாழ அறம் தேவை எனக் கூறுகிறார். மேற்கூறிய வள்ளுவரின் வாழ்வியல் கருத்துக்களை நம் சங்கப் பாடலான புறநானூற்றில்,

> **"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
> **அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத்**
> **தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
> **துஞ்சலும் இளர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
> **புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்**
> **உலகுடன் பெறினும் கொள்ளலர் அயல்விலர்**
> **அன்னமாட்சி அனைய ராகித்**
> **தமக்கென முயலா நோன்தான்**
> **பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"** (புறநானூறு - 182)

அதாவது சங்ககால மக்கள் அமிழ்தம் ஆயினும் தனித்து உண்ணார் பழியெனில் அஞ்சுவர் புகழ் எனில் உயிரையும் கொடுப்பார் உலகையே பெரினும் பழி செயல்களைச் செய்ய மாட்டார்கள் பிறர் நலம் போற்றி வாழும் வாழ்வையே விரும்பி ஏற்றனர் என்ற சங்க பாடல் வாழ்வினையும் வள்ளுவரின் **"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் நன்று"** (குறள் 82) என்ற குறளையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது வாழ்வின் உயரிய அறம் புலப்படும்.

**ஈகையும் கருணையும்**

மனித வாழ்வில் ஈகை என்பது மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை கடைபிடிக்கப்படும் தனி அறம் என்றே கூறலாம் ஈகை பண்பு இல்லை எனில் வறுமை என்ற பாவி நாட்டு மக்களின் வயிற்றில் புகுந்து அவர்களை உயிரற்ற ஜடமாக்கி விடும் என்ற உண்மையை

**"இன்மையின் இன்னாதது யாதனின்**
**இன்மையின் இன்மையே இன்னாதது"** (குறள் - 1041)

என்ற குறளில் பதிவு செய்கிறார்.

**முடிவுரை**

"இருப்பதில் கொடுப்பது சிறப்பு என்றால் இருப்பதையே கொடுப்பது சிறப்பினும் சிறப்பு" என்ற அகத்தியரின் வார்த்தைக்கு இலக்கணமாக திகழ்ந்தவர்கள் தமிழர்கள். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என தனக்கென தனி ஒரு வரையறையை வகுத்துக் கொண்டு ஒழுக்க நெறியில் தான் மட்டுமே உயராது பிறரது நலனிற்காகவும் அயராது உழைப்பதே வாழ்வியல் அறமாகும் இவ்வாறு அறத்தின் மொழி அகத்தே பயன்படுத்தி வாழ்ந்தோரே தமிழர்கள். தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதுமே அற நூல்களால் நிறைந்துள்ளது என்று சொல்லப்பட்டது அற நூல்களை பயிலுவதும் பாடமாக வைப்பதும் பயன்படுத்துவதும் இன்று குறைந்துவிட்டது என்பது வருந்தத்தக்கது. தமிழர்கள் இவற்றை மறக்காமல் பயின்று போற்ற வேண்டும் வெறும் வாழ்க்கை பயனும் பணமும் கருதி ஆங்கிலத்தை மட்டுமே கற்பிக்காமல் நம் தமிழர் சிறுவர் சிறுமியருக்கு இவற்றைக் கட்டாயம் கற்பிக்க வேண்டும். எனவே வள்ளுவர் வாய்மொழியை வாழ்வியலாக ஏற்று இவ்வையகம் சிறக்க மனித சமுதாயம் வாழ்வாங்கு வாழ அறம் செய்வோம்! ஒழுக்கம் ஏற்போம்! வறுமை ஒழிப்போம்! வாய்மை கொள்வோம்! வாழ்வாங்கு வாழ்வோம்!

**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்**


**தொழுது படித்திடடி பாப்பா** **- பாரதியார்**

# தாய்

கடவுள் கிடைத்திடாத வரம்
பூவுலகில் பிள்ளைகள்பெற்ற தவம்
ஏழ்மையிலும் ஏணியாக இருப்பாள்
கனவில் காணும் தேவதை அவள்
கண்களால் காண முடியும் தெய்வம் அவள்
தோல்வி கண்டு துவண்டு போகும்
தன் மகனை மடியில் சாய்த்திடுவாள்
வெற்றி பெற்ற தன் பிள்ளையை
இதயத்தின் மையத்தில் வைத்திடுவாள்
வான் மேகம் கண்டிடாத வானவில் அவள்
உலகம் கண்டிடாத சூரியன் அவள்
ஒளி இல்லா கருவறையில் என்னை
உயிராய் எண்ணி சுமந்தவள்
என் புன்னகை கண்டு மகிழ்ந்திடும்
தாமரை முகம் அவள்
வாழ்நாளை எனக்காக அர்பணித்தாள்
வாழ்வில் என்னை முன்னிறுத்தினாள்
என்னுயிர் சிறக்க எண்ணிய தாய்




மு.தமிழ்ச்செல்வன்
முதுகலை இரண்டாமாண்டு



# வகுப்பறை வளர்த்த பிள்ளை ...

தி.விக்னேஷ்குமார்

இளங்கலை இரண்டாமாண்டு

திருமலையூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. பள்ளியின் வாசலில் மாணவிகள் மிக அழகான கோலமிட்டு கொண்டிருக்க, மாணவர்கள் பள்ளியின் வைர விழா அரங்கில் உள்ள கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றுவதற்கும் உரிய மேடையை அலங்கரித்துக் கொண்டிருந்தனர். மாணவ மாணவிகள் அனைவரும் அன்று ஜொலிக்கும் ஆடைகளும் அழகு அணிகலன்களும் அணிந்து மகிழ்ச்சியுடன் முகம் மலர்ச்சியுடன் காணப்பட்டனர். பள்ளியில் ஆசிரியர்களும் மாணவர்கள் செய்யும் பணிகளை மேற்பார்வையிட்டும், அவர்களை வழிநடத்திக் கொண்டும் இருந்தனர். இவ்வளவு மகிழ்ச்சிக்கும் ஆர்ப்பாட்டத்திற்கும் காரணம் இன்று அந்தப் பள்ளியின் ஆண்டு விழா என்பதுதான். ஒரு வழியாக ஆண்டு விழாவுக்கான அலங்காரங்களையும் ஏற்பாடுகளையும் முடித்துவிட்டு சிறப்பு விருந்தினருக்காக அனைவரும் காத்துக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் பள்ளி வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து நல்ல வாட்டசாட்டமான, பொலிவான முகம் கொண்ட ஒருவர் இறங்க, பள்ளி முதல்வரும், பிற ஆசிரியர்களும் வாசலுக்கு சென்று வணக்கம். "வாங்க கலெக்டர் சார்" எனக்கூறி கனிவுடன் வரவேற்று மாலை அணிவித்தனர். கலெக்டரும் மேடையில் வந்து அமர்ந்து கலை நிகழ்ச்சிகள் அனைத்தையும் கண்டு களித்தார். பின்பு நிகழ்ச்சி தொகுப்பாளர் இறுதியாக ஆண்டு விழாவில் நடந்த போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு நம் மாண்புமிகு மாவட்ட ஆட்சியர் சிறப்புரை ஆற்றி விட்டு பின் பரிசுகளை வழங்குவார். எனவே மாண்புமிகு மாவட்ட ஆட்சியரை சிறப்புரை ஆற்ற அழைக்கிறோம் எனக் கூற, மாவட்ட ஆட்சியரும் தனது உரையை தொடங்கினார்:

"அன்பார்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், அலுவலக பணியாளர்களுக்கும் எனது அன்பான வணக்கங்கள்."

பசங்களா! நான் உங்க எல்லோருக்கும் ஒரு குட்டி கதை சொல்லப் போறேன்!

ஆதிச்சங்கரன் என்ற சிறுவன் ஒரு ஏழைக் குடும்பத்து பையன். அரசு மேல்நிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்தான். ஆதிசங்கரனின் அப்பாவோ வேலை வெட்டி எதற்கும் செல்லாமல் குடித்துவிட்டுத் திரியும் ஒரு மொடாக் குடிகாரன். ஆதிச்சங்கரனின் தாய் தான் கூலி வேலைக்கு சென்று குடும்பத்தை காப்பாற்றி வந்தார். ஆனால் ஆதிசங்கரனின் தந்தையோ குடித்துவிட்டு மனைவியையும், மகனையும் தினமும் அடிப்பது என ஊதாரித்தனமாக திரிந்தான். திடீரென ஒரு நாள் ஆதிச்சங்கரனின் தாய் கூலி வேலைக்குச் செல்லும்போது லாரி மோதி இறந்து விட்டார். ஆதிச்சங்கரன் தனக்கு தன் வாழ்வில் ஒரே ஆதரவாக இருந்த தனது தாயையும் இழந்ததால் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்தான். தன் தாய் இருந்தும் திருந்தாத தன் தந்தையை எண்ணும்போது அவனுக்கு மிகவும் ஆத்திரமாக இருந்தது. ஆனாலும் தான் நன்றாகப் படித்து பெரிய பொறுப்பில் அமர வேண்டும் என்ற தனது தாயின் ஆசையை நிறைவேற்றுவதற்காக அயராது படிக்கத் தொடங்கினான். தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக காலையில் பேப்பர் சப்ளை செய்து சம்பாதித்து விட்டு பின் பள்ளிக்குச் சென்று படிப்பதை வழக்கமாக்கிக் கொண்டான். வீட்டிற்கு சென்றால் தன் தந்தை குளித்துவிட்டு அடிப்பதால் முடிந்தவரையில் மிகுதியான நேரம் பள்ளியில் தனது வகுப்பறையிலேயே கழித்தான். மிகுதியான நேரம் தன் வகுப்பறையிலேயே இருந்து வெறித்தனமாகப் படித்தான். ஆகையால் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று, பின் நல்ல கல்லூரியில் சேர்ந்து அங்கேயும் நல்ல மதிப்பெண் பெற்று அரசு தேர்வு எழுதி படிப்படியாக உயர்ந்து மாவட்ட ஆட்சியராக பணியில் அமர்ந்தான். ஏழை வீட்டில் குடிகார அப்பனுக்கு மகனாகப் பிறந்து சிறுவயதிலேயே தனது தாயை இழந்து பின் பேப்பர் சப்ளை செய்து கொண்டே பள்ளியில் படித்த அந்த ஆதிசங்கரன் நான் தான். தாயை இழந்த எனக்கு என் வகுப்பறை அடைக்கலமும், ஆதரவும் தந்தது. குடிகாரனின் மகனாக இருந்த இந்த ஆதிசங்கரனை மாவட்ட ஆட்சியர் ஆக்கியது. இந்தப் பள்ளியில் இருக்கும் வகுப்பறைகள் தான். ஆகவே எனக்கு வகுப்பறை தாயின் கருவறை போன்றதாகும் எனக் கூறி தனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம். எனக் கூறியதும் பள்ளியில் அனைத்து திசைகளிலும் இருந்து கரவொலியு ம் கைத்தட்டல்களும் மலை போலப் பொழிந்தது.

## ஆறு

மழையும் பொழிய நீரும் பெருக

புல்லும் வரை மீனும் துள்ள

பசுமை பொங்க மனமும் மகிழ

திருவிழா தொடங்க கூட்டம் பெருக

அழகர் இறங்க பக்தி பரவ

பரவசம் அடைய பயிர்கள் முளைக்க

நாடு செழிக்க ஓடும் ஆறோ



## தேசிய ஒருமைப்பாடு

எதிலும் கூடா மக்கள் எல்லாம்

விடுதலை போரில்

ஒன்று கூடி


உதிரம் சிந்தி

உடலும் உள்ளமும் வருந்தி

தூக்கமும் கனவும் துளைத்து

விடுதலை பெற்ற வீரரை போற்றவே....

செ.பவானி.
இளம் இலக்கியம் மூன்றாமாண்டு




நீர் வழிப் படுஉம் என்ற நாவலுக்கு
2023 ஆம் ஆண்டிற்கான
சாகித்ய அகாடமி விருது பெறும்
தேவி பாரதி அவர்களுக்கு வாழ்த்துகள்



# காத்திருப்பு

ச.சந்தியா
முதுகலை இரண்டாமாண்டு

அவசர அவசரமாக திருமணமேடையில் நின்று கொண்டிருக்கிறாள் சாரதா... ஊரறிய நடக்கவில்லை திருமணம் என்றாலும் சில உறவுகளும் அண்டை வீட்டினர் ஆசியுடனும் அவசரமாக பெற்றோர் பார்த்த மணமகனுடன் நடைபெற்றது

அதிகம் படிக்காத ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இந்த கிராமத்துப் பெண்ணின் தந்தைக்கு தன்மகளை படித்து வெளி ஊரில் வேலை பார்க்கும் மாப்பிள்ளை தேடி வந்து கட்டிக்கொண்டதால் பெருமையும் கூட,

திருமணம் முடிந்த கையோடு தன் பெண்ணை மாப்பிள்ளை தன்னுடனே அழைத்துச் செல்லப்போவதாக கூறிய ஒற்றை வார்த்தை போதுமானதாக இருந்தது. விசாரணை இல்லாமல் சாரதாவை தாரை வார்த்து கொடுப்பதற்கு...

திருமணம் முடிந்த அன்று மதியமே விமானம் என்று கூறி சாரதாவை மட்டும் அழைத்துக் கொண்டு விரைவாக சடங்கு சம்பிரதாயங்களை முடித்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

ஏதும் அறியாத முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் சிறுமியைப் போல் தன் கணவனுடன் சென்றாள். சாரதா...

எப்போதாவது தன் ஊரின் மீது ஆகாயத்தில் பறக்கும் விமானத்தை பூமியிலருந்து பார்க்கும் போதே குழந்தையைப் போல் குதூகலம் கொண்டு, மகிழ்ந்த தருணங்கள் சாரதாவின் கண் முன் வந்து போனது விமானப் பயணம் உள்ளங்கால்களை கூசச் செய்தாலும் கணவனின் கைப்பிடித்து நடக்கும் போதே ஏதோ ஒரு தைரியம் சீட்பெல்ட் மாட்டத் தெரியாமல் தவிக்கையில் கணவன் மாட்டிவிடும் போது ஏதோ சொல்ல முடியாத இன்பம், சன்னலோர இருக்கையில் கணவனைப் பார்க்காமல் வாய்ப்பிளந்து வெளியே வேடிக்கை பார்த்தாள் சாரதாவின் குறும்புகளை இரசித்துக் கொண்டே இருந்தான் மாறன்.

மாறன் வேறுயாருமில்ல சாரதிவின் கணவன் தான்.

இதுவரை அநாதையாக ஒரு ஆசிரமத்தில் வளர்ந்து கடினப்பட்டு படித்து மும்பையில் மிகப்பெரிய நிறுவனத்தில் நல்ல வேலையில் சேர்ந்து இன்று மாதம் இரண்டு இலட்சம்

சம்பாதிக்கும் அளவுக்கு உயர்ந்த பின் தமிழகத்தை சுற்றிப்பார்க்க மதுரை வந்தப்போது மீனாட்சி அம்மன் கோயிலில் சாரதாவைப் பார்த்தவுடன் பிடித்துப் போக நேரடியாக கோயிலில் வைத்தே அவர்கள் பெற்றோரிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, தன்நிலையை தெரிவித்து உங்கள் மகளைப் பிடித்திருக்கிறது என்னை உங்களுக்கு பிடித்திருந்தால் உங்கள் மகளை எனக்கு திருமணம் செய்து தாருங்கள் என்றான்

விவசாயியாக இதுவரை வாழ்ந்ததால் கடன்பட்டு வறுமையில் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று கடைசியாக மீனாட்சித் தாயை வணங்கி விட்டு வரலாம் என்று எண்ணி வந்த எனக்கு மீனாட்சி தாய் நல்வழி காட்டியதாகவே நம்பி தன் மகளை திருமணம் செய்து தந்தார்

மாறன் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த சாரதாவின் கைகளை பற்றினான். சாரதா வெட்கமாக புன் முறுவலுடன் பார்த்தாள்.

அந்த நொடியில் விமானத்தில் லேசான ஆட்டம் தோன்றியது... பயத்தில் கணவனின் கைகளை இறுக்கமாக பற்றினாள் சாரதா.

டமார் என்ற சத்தத்துடன் விமானத்தின் ரெக்கை ஒன்று தீப்பற்றி எரிய ஆரம்பித்த சில வினாடிகளில் நெருப்பு விமானம் முழுவதையும் ஆக்கிரமித்து பற்றி எரிந்து வெடித்து சிதற ஆரம்பித்தது. என்ன நடக்கிறது என்பதை உணரும் முன்னரே அனைவரும் கருக ஆரம்பித்தனர்.

விமானம் எரிந்து பயணிகள் அனைவரும் சாம்பலான செய்தி ஊடகங்களில் மாறி மாறி ஒலிபரப்பு செய்யப்பட்டாலும், மதுரைக்கு அருகில் உள்ள கிராமத்தில் சாரதாவின் பெற்றோரின் காதுகளுக்கு இந்த செய்தி சென்றடையவே இல்லை.

தன்மகளை ஒரு நல்லவனுடன் சேர்த்து வைத்த திருப்தியுடன் தன் மகளின் நல்வாழ்வுக்காகவும் எப்போது நம்மை பார்க்க திரும்ப வருவார்கள் தன் மகளும் மருமகனும் என்று இறைவனை வேண்டி காத்திருக்கின்றனர் அந்த ஏழை குடும்பத்தினர்

**"நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற**
**நூலளவே யாகுமாம் நுண்ணறிவு"** (வாக்குண்டாம்)

# சிறார் இலக்கியத்தில் புனைவுகள்

## (எஸ்.இராவின் ‘மீசையில்லாத ஆப்பிள்’ நூலை முன்வைத்து)



**வீ.அதிவீரபாண்டியன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், விரிவுரையாளர்

இலக்கியம் என்பது காலம் மற்றும் இடம் என்னும் தளங்களையும், வாசகர்களின் அறிவுத் திறன்களையும், ஈர்ப்பு முறைகளையும் எதிர்கொண்டு புதிதாய் உயிர்கின்ற அற்புதப் பண்பினைப் பெற்றிருக்கிறது. இலக்கியத்தை தன்மையின் அடிப்படையில் மரபிலக்கியம், புத்திலக்கியம் என பகுக்கலாம். மரபிலக்கியம் என்பது செய்யுள் வடிவில் அமைவது; புத்திலக்கியம் என்பது செய்யுள் உரைநடை என இரண்டாலும் இடம்பெறும். ஆனால் உரைநடையே மிகுதி. வாசகரைக் கவர்ந்து வாசிக்க வைப்பதை மட்டும் கொண்டவையாக அன்றி வாசகருடன் அறிவார்ந்து உரையாடும் தன்மை கொண்டதாகவும்; வாசகருக்கு வாழ்க்கையைப் பற்றிய கருத்துப் பகிர்வை உண்டாக்கவல்லதும் நவீன இலக்கியம் என்பர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியத்தின் தாக்கம் நவீன இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் பரிணாமம் கொள்வதை நாம் பார்க்க இயலும். இந்த அடிப்படையில் நவீன இலக்கியத்தின் முன்னோடிகளான மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அ.மாதவையா, சுப்பிரமணிய பாரதி, புதுமைப்பித்தன் ஆகியோர் தொடங்கி பல காலகட்டங்களாக நீளும் நவீன இலக்கிய மரபு தமிழில் உள்ளது. அம் மரபில் நவீனத் தமிழ்ப் படைப்பாளிகளில் தனித்துவமாக விளங்கியவர் எஸ்.ரா என்று அழைக்கப்படும் எஸ்.இராமகிருஷ்ணன். “இலக்கியம் பற்றிய எந்த ஒரு விவாதமும் திறனாய்வு தான்” என்பர். இந்த வரையறையின் அடிப்படையில் தமிழ் எழுத்துலகில் நவீன இலக்கியவாதிகள் வரிசையில் நன்கு அறியப்பட்ட எஸ்.ரா வின் ‘மீசையில்லாத ஆப்பிள்’ எனும் சிறுவர்களுக்கான புனைகதையில் வெளிப்படும் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது. ‘

### சிறுவர் இலக்கியம்

வாசிக்க இலகுவான மொழி நடை, குழந்தைகளின் கற்பனைக்குத் தீனி போடும் கதை, மிக இயல்பான பேச்சு நடை இவைகள்தான் சிறார் இலக்கியத்தின் அடிப்படை. பொதுவாக பன்னிரெண்டு வயதுக்கு உட்பட்ட சிறார்கள் வாசிக்க அல்லது அவர்களுக்கு வாசித்துக்காட்ட எழுதப்படும் எதுவாயினும் அது சிறார் இலக்கியவகையில் அடங்கும். சிறார்களின் கற்பனைத்திறனை வளர்த்தெடுத்தல் அல்லது அவர்களின் பன்முகத் திறமையை அடையாளம் காணுதல் மற்றும் மொழிவளத்தை வெளிக்கொணர்தல் போன்றவை முக்கிய பங்காக இன்றளவும் இருந்து வருகிறது. வளர்ந்த நாடுகளில்

வயதுக்கேற்ற சிறார் நூல்கள் பல நிலைகளில் வெளிவருகிறது. எடுத்துக்காட்டாக இரண்டு வயதுக் குழந்தைக்கான நூல்கள், இரண்டு வயதிலிருந்து ஐந்து வயதுக்கேற்ற நூல்கள், ஆறு வயதிலிருந்து எட்டு வயதுகேற்ற நூல்கள், ஒன்பது வயதிலிருந்து பன்னிரெண்டு வயதுக்கேற்ற நூல்கள் என தரம் பிரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆனால் தமிழில் இதுபோன்ற வயதுக்கேற்ற நூல்கள் பெருமளவு வெளிவருவதாக தெரியவில்லை.

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் ஆங்காங்கே சில படைப்புகள் சிறுவர்களுக்கு ஏற்றதாக இருந்ததென்றாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் சிறுவர்களுக்கென இலக்கியங்கள் பெரிதும் தோன்றின. அதன் தொடர்ச்சியாக இருபதாம் நூற்றாண்டில் சிறுவர் இலக்கியம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டது. இந்திய மொழிகளில் தமிழ் மொழியில் மட்டும்தான் குழந்தை இலக்கியம் குறிப்பிடத்தக்க சிறப்பை பெற்றுள்ளது. ஔவையார் ஆத்திச்சூடி மூலம் தமிழில் குழந்தை இலக்கியத்தை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து அவருடைய கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இந்நூல்கள் எல்லாம் அன்றைய சிறார்களை நல்வழிப்படுத்தின. இரண்டு சொற்களில், ஒரு வரியில், இரண்டு வரிகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த பெருமையும், அகர வரிசைப்படுத்தி, குழந்தைகள் எளிதில் மனனம் செய்யும்படியாகப் பாடல்களைப் பாடிய பெருமையும் ஔவையாருக்கே உரியது. தொடர்ச்சியாக, நீதிநெறிகளை எளிமையாக்கி மனத்தில் பதிய வைக்கும் பாடல்களைத் தந்தவர்கள் அதிவீரராம பாண்டியனின் ‘வெற்றி வேற்கை’, உலகநாதரின் ‘உலக நீதி’, கவிமணியின் ‘மலரும் மாலையும்', பாரதியாரின் ‘பாப்பா பாட்டு', பாரதிதாசனின் ‘இளைஞர் இலக்கியம்' ஆகிய படைப்புகள் குறிப்பிடத்தக்கவை.

கதைகளுக்கு நம்மிடையே பஞ்சமே இருந்ததில்லை. கதை என்றால் எந்த வயதினருக்கும் பிடித்துவிடும். கதைசொல்வதும் கதை கேட்பதும் நம்மிடையே காலம் காலமாக இருந்துவரும் ஒரு பழக்கம். கற்பனை வளத்தைத் தூண்டக்கூடியது. விக்ரமாதித்தன் கதைகள், தெனாலிராமன், மரியாதை ராமன், பீர்பால், முல்லா, ஈசாப் கதைகள், அரேபிய இரவுக் கதைகள் என கதைகளுக்கு பஞ்சமேயில்லை. அதனைத்தொடர்ந்து நாடோடிக்கதைகள் பரவியது. இது போன்ற கதைகள் சிறார் இலக்கிய வளர்ச்சிக்கும் சிறுவர்களின் சிந்தனைக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

**எஸ். இராமகிருஷ்ணன்**

நவீன தமிழ் இலக்கியத்தின் மிக முக்கிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன். கடந்த பல ஆண்டுகாலமாக சிறுகதைகள், நாவல், கட்டுரைகள், நாடகம், குழந்தைகள் இலக்கியம், மொழிபெயர்ப்பு, சினிமா, ஊடகம், இணையம் என்று பல்வேறு தளங்களிலும் தீவிரமாக இயங்கி வருகிறார். நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார் முழுநேர

எழுத்தாளரான இவர் இந்தியா முழுவதும் சுற்றியலைந்து வாழ்வு அனுபவங்கள் கொண்ட தேசாந்திரி . உப பாண்டவம், நெடுங்குருதி, யாமம், உறுபசி, துயில். நிமித்தம், சஞ்சாரம், இடக்கை, பதின் ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க நாவல்கள் ஆகும். எனது இந்தியா, மறைக்கபட்ட இந்தியா போன்றவை இவரது முக்கிய வரலாற்று நூல்களாகும். சிறார்களுக்காக பதினைந்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளார். வாழ்நாளை சாதனைக்கான இயல்விருது, தாகூர் விருது, பெரியார் விருது. மாக்சிம் கார்க்கி விருது, தமிழக அரசின் சிறந்த நூலிற்கான விருது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

**எஸ்.ராவின் சிறார் இலக்கிய நூல்கள்**

சிறுவர்களின் நலன்கருதி சிறுவர்களுக்கான இலக்கியங்களைப் படைக்கும் நோக்கில் எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள் “ஏழு தலைநகரம் கதைகள், கிறு கிறு வானம், கால் முளைத்த கதைகள், நீள நாக்கு, பம்பழாபம், எழுதத் தெரிந்த புலி , காசு கள்ளன், தலையில்லாத பையன், எனக்கு ஏன் கனவு வருது, வானம், லாலிபாலே, நீளநாக்கு, லாலீப்பலே, அக்காடா, சிரிக்கும் வகுப்பறை, வெள்ளை ராணி, அண்டசராசம், சாக்கிரடீஸின் சிவப்பு நூலகம், கற்பனைக் குதிரை, படிக்கத் தெரிந்த சிங்கம், மீசை இல்லாத ஆப்பிள், பூனையின் மனைவி, இறக்கை விரிக்கும் மரம், உலகின் மிகச்சிறிய தவளை, எலியின் பாஸ்வோர்ட், டான்டூனின் கேமிரா” போன்ற எண்ணற்ற நூல்களை எழுதி சிறார் இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுளார்.

**புனைவு**

“புனைவு” என்ற சொல் இலத்தீன் வார்த்தையான “ஃபிக்டஸ்” என்பதிலிருந்து வந்தது, அதாவது “வடிவமைப்பது” என்பது பொருளாகும். புனைவு என்ற சொல் ஒப்பனை என்னும் பொருளிலும் ஆளப்படுகிறது. மெய்ம்மைக்கும் ஒப்பனை தேவைப்படுகிறது. கற்பனையாக உருவாக்கப்பட்ட கதைகளே புனைகதைகள் என்பர். அதாவது புனையப் பெறும் கதை வடிவம் புனைகதை ஆகிறது. இருப்பினும் புனைகதைகள் முழுமையாக கற்பனையாகவே இருக்கவேண்டும் என்ற வரையறை இல்லை. பெரும்பாலும் புனைவுகள் புதினம், சிறுகதை என்னும் இரு இலக்கிய வகைகளைகளிலும் மிகுதி. புனைகதைகள் வருணனைப் பாங்கில் அமையும். பெரும்பாலும் எழுத்தாளனே முன்னின்று கதாபாத்திரங்களின் உணர்வையும், நடைபெறும் செயல்களையும் எடுத்துரைப்பதாக எழுதப்பெறுவதாகும். புனைவு என்ற வடிவம் நம் தமிழ் இலக்கியப் பரப்பில் நெடுங்காலமாகவே இருந்துவந்துள்ள ஒரு இலக்கிய வடிவமாகும். இருப்பினும் மேலை நாட்டினரின் இலக்கிய விவரிப்பின் பொருட்டு தனியொரு வடிவமாக புனைவு என்பது

கோட்பாட்டியல் அடிப்படையில் இன்று பேசப்படுகிறது எனலாம். புனைகதைகள் நடப்பியல் சார்ந்த புனைகதைகள், நடப்பியல் சாராத புனைகதைகள், அரைப் புனைகதைகள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

காலங்காலமாய் சொல்லப்பட்டுவரும் பஞ்சதந்திரக் கதைகள், அறிவுரைக் கதைகள் நீதிக்கதைகள், குழந்தைப் பாடல்கள் தாண்டி சிறார் இலக்கியம் இன்னும் பழைய மரபுவழிச் சிந்தனையிலிருந்து மீளவில்லை என்ற கவலையைத் தீர்க்கும் வகையில் அமைந்துள்ளது. எஸ்.இராவின் மீசையில்லாத ஆப்பிள் எனும் புனைகதை, பழைய மரபு கதைகள் இன்றைய இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் குழந்தைகளுக்கு போதுமானதாய் இல்லை. ”குழந்தைகள் உலகில் வாய்பேசாத மிருகங்கள் மனிதக் குரலில் பேசவேண்டும் அல்லது அந்த மிருகங்களோடு இவர்கள் பேசுவார்கள். கண்ணுக்குத் தெரியாத உணவைக் காற்றில் பிசைந்து உடன் இருப்பவர்களுக்குப் பகிர்ந்து சுவை சேர்ப்பார்கள். கைக்குக் கிடைத்த பொருட்களைக் கொண்டு இயந்திரங்களாய்க் கற்பனைசெய்து வேற்று கிரகத்திற்கு சென்று திரும்புவார்கள். இடையிடையே சாதுரியமான பேச்சு, நகைச்சுவை, மனதுக்கு மிக நெருக்கமான அப்பாவிக் கதாப்பாத்திரங்கள் என ஏராளமான வடிவங்களை ஒன்றாய்க் குழைத்து புதுவடிவம் செய்துகொடுப்பதில் வல்லவர்கள் குழந்தைகள்” என குழந்தைகளின் இயல்புகளைக் குறிப்பிடுகிறார் எழுத்தாளர் விழியன்.

### கதையின் கரு

வளர்ந்து விட்ட அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஆக்கங்கள் எந்த அளவிற்கு உண்டோ அதேயளவு அழிவுகளும் உண்டு. மனிதர்களின் கடுமையான பணிகளை எளிமைப்படுத்துவதற்கு எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன அதனை சரிவர பயன்படுத்த இயலாமையினால் தீமைகளை தேடிக் கொள்கின்ற நிலையினை நடைமுறை வாழ்வில் கண்கூடாக பார்க்கலாம். ஒரு வீட்டில் உள்ள குளிர்சாதன பெட்டியில் வைத்திருக்கக்கூடிய பொருள்கள் மனிதர்களுக்கு எவ்விதமான தீமைகளை ஏற்படுத்துகின்றன என்பதனை குளிர்சாதன பெட்டியில் உள்ள அஃறிணைப் பொருள்கள் பேசுவதாக புனையப்பட்டு உணவுப் பொருள்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை குழந்தைகளுக்கு எடுத்துரைக்கும் விதமாக இக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

### ஆப்பிளின் புலம்பலும் கோபமும்

பல நாட்களாக குளிர்சாதன பெட்டிக்குள் இருக்கக்கூடிய ஆப்பிளை யாரும் சாப்பிடவில்லை ஆப்பிள் குளிர்சாதன பெட்டியின் குளிர் தாங்க முடியாமல் மிகுந்த சிரமத்தில் இருக்கிறது குளிர் தாங்காமல் கூச்சலிடும் ஆப்பிளினுடைய புலம்பலை குளிர்சாதன பெட்டிக்குள் இருக்கக்கூடிய மற்ற கேரட், முட்டைகோஸ், தக்காளி போன்ற

காய்கறிகளும் பொருட்படுத்தவில்லை. பல நாட்களாக குளிர்சாதன பெட்டிக்குள் இருக்கும் அந்த ஆப்பிள் யாருமே பயன்படுத்தாமல் இங்கு வைப்பதற்கு எதற்காக என்னை வாங்கினார்கள் என ஆதங்கப்படுகிறது. இன்றைக்கு பகட்டு வாழ்க்கையின் விளைவாக தேவைக்கு அதிகமான பொருள்களை நாம் வாங்கி வைத்துக் கொண்டு பயன்படுத்தாமல் இருக்கின்றோம் அதே நிலை தான் இந்த உணவுப் பொருள்கள் விடயத்திலும். இதனை

**"வேலை, பள்ளி, அவசரம் என ஆளுக்கு ஒருபக்கம் ஓடிக்கொண்டிருந்த காரணத்தால் அவர்கள் எவரும் பிரிட்ஜில் என்ன இருக்கிறது? என கவனிக்கவேயில்லை"**

**"எதற்காக, தான் இப்படி அடைந்து கிடக்கிறோம்? எத்தனை அழகாக காற்றில் ஆடிக்கொண்டு மரத்திலிருந்தோம்! இப்படி, யார் வீட்டிலோ வந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறோமே. என அந்த ஆப்பிளுக்கு ஆத்திரமாக வந்தது"**

இதோடு அந்த குளிர்சாதன பெட்டி வாங்கி பல ஆண்டுகள் ஆன காரணத்தினால் அதிலிருந்து வரக்கூடிய சீரற்ற காற்று பெட்டியில் இருக்கக்கூடிய உணவுப் பொருள்களுக்கு மட்டுமின்றி சுற்றுச்சூழலுக்கும் கேட்டினை விளைவிக்கிறது என்பதனை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

## குளிர்சாதனப் பெட்டியினுள் உரையாடல்

ஆப்பிளின் புலம்பலைத் தொடர்ந்து குளிர்சாதனப் பெட்டியினுள் இருக்கக்கூடிய மற்ற காய்கறிகளும் பழங்களும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு விவாதம் செய்து உரையாடல் மேற்கொள்வதை நகைச்சுவையோடு ஆசிரியர் பதிவு செய்கிறார். குளிர் வேண்டும் என்று சொல்லக்கூடிய கேரட், முட்டைக்கோஸ், பீட்ரூட், முள்ளங்கி, தக்காளி, பட்டாணி, திராட்சை, ஜாம், கூல்டிரிங்க், ஐஸ்கிரீம் போன்றனவும் குளிர் வேண்டாம் என முட்டை, காளான், ஆப்பிள், பூசணி, அவரக்காய், மிளகாய், கீரை, எலுமிச்சை, கொத்தமல்லி போன்றனவும் இரு வேறு பிரிவுகளாகப் பிரிந்துகொண்டு சண்டையிட்டும் வசைப்பாடிக்கொண்டும் இருப்பதாக ஆசிரியர் கதையை நகர்த்திச் செல்கிறார். இதனை,

அப்போது ஆப்பிள் சார்பாக குடைமிளகாய் குரல் கொடுத்தது:

**"ஆமா, குளிர் ஓவராத்தான் இருக்கு, இந்த பிரிட்ஜை கண்டுபிடிச்சவன் யாரு?, நம்மள இம்சைப் பண்ணுறதுக்குன்னே இதை உருவாக்கியிருக்கான்.."**

**"ஏன்ணே, உங்களுக்கும் நடுங்குதா, வயசாகிருச்சா?"** எனக்கேட்டது முட்டைக்கோஸ்,

**"ஆமா, உனக்கு என்ன ஒரு சட்டைக்கு பதிலா பத்துச் சட்டை போட்டு இருக்கே. நான் அப்படியா? உடம்பு எல்லாம் குளிர்ல விரைச்சிப் போயிருக்கு"** என்றது குடைமிளகாய்,

"அப்போ, வெளியே போய் எண்ணெய் சட்டியில வறுபட வேண்டியதுதானே" என, கேலியாகச் சொன்னது முட்டைக்கோஸ்.

போன்ற பல உரையாடல்கள் வாயிலாக அறியலாம்.

## அறிவியலின் தீமை

இன்றைக்கு காய்கறிகளும் பழங்களும் நீண்ட நாள் கெடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் குறைந்த கால சாகுபடியில் அதிகமான விளைச்சலைத் தர வேண்டும் என்பதற்காகவும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி விளைவிக்கப்படுகின்றன. அவற்றால் ஏற்படக்கூடிய தீமைகளை குழந்தைகளுக்கு புரியும் வகையில் இக்கதை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

> **"பழங்கள் காய்கறிகள் போன்றவற்றை மரபணு மாற்றம் செய்கிறார்கள் இயற்கை உரங்களுக்கு பதிலாக செயற்கை உரங்களை பயன்படுத்துகிறார்கள் இதனால் மண்ணுக்கும் மனிதர்களுக்கும் கேடு என்பதை சிந்திப்பதே இல்லை"**

என மரபணு மாற்றம் செய்யப்பட்டு இருக்கக்கூடிய ஆப்பிளின் தன்மையையும் அதனால் ஏற்படும் சூழலியல் தீமை பற்றியும் விரிவாக இக்கதையில் கூறியிருக்கிறார்.

## மனிதர்களுக்கு ஆப்பிள் கூறும் அறிவுரை

ஒரு வண்ணத்துப்பூச்சி நகரங்களில் சுற்றித் திரிவதை கண்டு ஆப்பிள் தானும் மனிதர்கள் வசிக்கக்கூடிய பகுதிக்குச் சென்று சுதந்திரமாக இருக்க விரும்புகிறது. ஆனால் மனிதர்கள் வசிக்கக்கூடிய பகுதி பெரும் ஆரவாரமாகவும் பரபரப்பு நிறைந்தும் சண்டை சச்சரவுமாக இருப்பது வண்ணத்துப்பூச்சி சொன்னதற்கு நேர் எதிராக இருந்தது. அதனை கண்டு

> **"இந்த நகரைப் பார்க்கவா இத்தனை கனவு கொண்டோம்! என ஆப்பிளுக்கு ஒரே வருத்தமாக இருந்தது, மனிதர்களை அதற்குப் பிடிக்கவேயில்லை."**

என எஸ்.இராமகிருஷ்ணன் தன்னுடைய கதையில் பதிவு செய்கிறார். மனிதர்களுடைய பேராசையால் மண்ணுக்கும் மனிதர்களுக்கும் கேடு என்பதை சிந்திப்பதே இல்லை என ஆப்பிள் ஆதங்கப்படுகிறது. இயற்கைக்கு மாறாக செயற்கை உணவுகளின் எதிர் விளைவுகளை அறிந்தும் **"படித்தவங்களே ஏன் இப்படி நடந்துக்கிறாங்க இது தப்பு இல்லையா"** என ஆப்பிள் கூறுகிறது.

மறுநாள் காலை வீட்டு வேலைக்காரி அந்த பிளாஸ்டிக் பையை குப்பைத் தொட்டியில் போட எடுத்துக் கொண்டு நடந்த போது ஆப்பிள் மட்டும் வருத்தமான குரலில் சொன்னது **"என் வாழ்க்கை யார் பசிக்கும் உணவாக முடியாமல் வெறுமண முடிய போகுது அதான் வருத்தமா இருக்கு"** என்று ஆப்பிளின் ஆதங்கமாக ஆசிரியர் வெளிப்படுத்தும்

இக்கருத்து சமுதாயத்தில் நமது செயல் மற்றவருக்கு ஏதோவொரு விதத்தில் பயன்கொள்ளத்தக்க வகையில் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

## நிறைவுரை

- படைப்பு என்பது படைப்பாளரின் மனத்தில் எழுந்த கருத்துக்கள் படிப்பவரின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும். அந்த வகையில் மனித சமுதாயத்திற்கு தேவையான சிந்தனையை வெளிப்படுத்தும் கருத்தை மையமாகக் கொண்டு இக்கதை புனையப்பட்டுள்ளது. சிறார் இலக்கிய வகையில் அமைந்த கதை என்பதால் சிறுவர் இலக்கியங்களுக்கான அடிப்படைக் கோட்பாடுகளை உள்வாங்கிக் கொண்டு சிறுவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் எளிய நடையில் எள்ளல்தொனிக்க இயற்றப்பட்டிருக்கிறது.
- கதையின் தன்மைக்கு ஏற்ப தலைப்பிட்டிருப்பதும்; கதையின் பின்புலமும்; காதபாத்திரங்களும் ஒன்றோடொன்று பொருந்துவதாக அமைந்து சிறுவர்களின் சிந்தனைக்கு தீனி போடுவதாக அமைந்துள்ளது.

## பிழையின்றி எழுதுவோம்

**ஆத்திசூடி / ஆத்திச்சூடி எது சரி?**

- ஔவையார் பாடியது ஆத்திசூடி. ஆத்தி மாலை சிவபெருமானுக்குரிய மாலைகளில் ஒன்று. 'ஆத்தியைச் சூடிய சிவபெருமான்' என்பது பொருள்.
- இந்நூலை 'ஆத்திச்சூடி' எனச் சொல்வதும் எழுதுவதும் தவறு. 'செந்தமிழாக எழுதுவதாக நினைத்துச் செய்யும் பிழை அது'.
- கையைத் தட்டு -'த்' வரும். கைதட்டு -'த்' வராது

  சிலையைச்செய் - 'ச்' வரும். சிலைசெய் -'ச்' வராது

  ஆத்தியைச்சூடி - 'ச்' வரும். ஆத்திசூடி -'ச்' வராது

**ஆத்திசூடி என்பதே சரியாகும்**

நன்றி : தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தங்களும் - பேராசிரியர் தமிழண்ணல்






**பா.நந்தினி**

இளங்கலை இரண்டாமாண்டு





# காரிகையின் கனவு

கோ.ஜெயலட்சுமி

முதுகலை இரண்டாமாண்டு

தினம் தினம் கனவு நோக்கி “பற, பறக்க முடியவில்லையென்றால் ஓடு, ஓட முடியவில்லையென்றால் நட, நடக்க முடியவில்லையென்றால் ஊர்ந்தாவது செல்" என்கிறது ஒரு சீனப் பழமொழி. எந்தவொரு காரணத்திற்காகவும் நம் கனவு நோக்கிய பயணத்தை கைவிடக் கூடாது என்பதே இக்கட்டுரை.

**காரிகையின் கனவு**

இயல்பாகவே பெண்களுக்கு மென்மையான கலைகள் மீது ஆர்வமும் ஈடுபாடும் உண்டு. சிறுவயதிலிருந்தே ஆடி, பாடி,. பேசி, நடித்து, இசைத்து, விளையாடி, வரைந்து பிறரைப்போல பாவனை செய்து ஆர்பாட்டமாகவே வாழ்வை துவக்குகிறாள். தன்னை சுற்றியுள்ளவர்கள் பாராட்டும் போதும், ரசிக்கும் போதும் அந்தக் கலையை பிடித்துக் கொள்கிறாள். அவளது திறமையை வெளிப்படுத்த துடிக்கிறாள் ஆனால் இவளது (பெண்ணின்) கனவு ஊமை கண்ட கனவாகவே முடிந்துவிடுகிறது.

**பொய்யாக்கப்பட்ட கனவுகள்**

இன்று அடுப்பங்கறைக்கும் படுக்கையறைக்கும் பந்தாடப்பட்டுக் கொண்டிருக்கும் இளம் வயது பெண்களைக் கேளுங்கள், அவர்களது இளமைக் கால கனவு என்னவென்று? அந்த பெண்களிடமிருந்து ஆயிரமாயிரம் கனவுகளை நாம் சேகரிக்க முடியும். பெண்களின் வாழ்க்கையை திருமணத்திற்கு முன். திருமணத்திற்கு பின் என இரண்டாக பகுக்கலாம். அவள் தன் கனவுகளை வெல்ல எடுக்கும் அதீத முயற்சிகளும், விடாத பயிற்சியும் திருமணம் என்ற ஒற்றைச் சொல்லில் புதைந்து விடுகிறது.

**காரிகையின் கனவு கணவனுக்காக முடங்குகிறது**

அவருக்கு பிடிக்காது என்ற சொல்லுக்குப் பின்னால் தன் கனவுகளை அழித்துக்கொண்ட வலி நிறைந்த பெண்களை தினம் தினம் பார்க்கிறோம். ஒரு தந்தையாக

தன் மகளின் உணர்ச்சியை ஊக்கப்படுத்தும் ஆணுக்கு, ஒரு கணவனாக தன் மனைவியின் கனவை முடக்கத்தான் தெரிகிறது

## வீட்டிற்குள்ளே பெண்ணை பூட்டிவைக்காதே

கலைத்துறையில் உள்ள பெண்கள் ஒழுக்கம் சார்ந்து விமர்சிக்கப் படுகிறார்கள். நல்ல குடும்பத்துப் பெண்கள் ஆடல் கற்றுகொள்ள மாட்டார்கள் என்ற விமர்சனத்தை புறம்தள்ளினால் தான் சின்னச்சின்ன ஆசைகளைக்கூட நிறைவேற்றிக்கொள்ள முடிகிறது. "காற்றைவிட கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்" என்றார் சேக்சுபியர். ஆனால் பெண்களின் பாதுகாப்பு என்ற பெயரைக்கொண்டு பெண்களை வீட்டிற்குள்ளேயே பூட்டிவைக்கிறார்கள். தந்தைக்காக, கணவருக்காக, குடும்பத்துக்காக, எழுதுவதையும் பாடுவதையும் ஆடுவதையும் படிப்பதையும் விரும்பிய பணியை செய்வதையும் பார்க்கும் தொழிலையும் நிறுத்திவிட்ட பெண்கள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறார்கள்

## வெற்றியின் இரகசியமான கனவு

ஒரு ஆணின் இலட்சியம் அவனை நாயகனாகக் காட்டுகிறது அதே சமயம் ஒரு பெண்ணின் இலட்சியமும், கனவுகளும் அவளைப் குடும்ப வாழ்க்கைக்கு ஒத்து வராத திமிர் பிடித்தவளாகக் காட்டுகிறது. ஆண் வெற்றிபெறும் போது கொண்டாடுகிறவர்கள் பெண் வெற்றி பெறும் போது அவளது ஒழுக்கத்தை சந்தேகப்படுகின்றனர். உயரே செல்லச் செல்ல அவள் மீது எறியப்படும் ஒரு அவச்சொல் அவளது நீண்ட கடினமான பயணத்தை ஒன்றுமில்லாமல் செய்கிறது. வெற்றி பெற்ற ஒவ்வொரு பெண்ணுக்கும் முன்னால் புன்னகையும், பூங்கொத்துகளும், பரிசுகளும், புகழும் அணிவகுக்கலாம். ஆனால் அதற்குப் பின்னால் மறைந்திருப்பது அவமானம், கண்ணீர், வியர்வை, இரத்தம். தோல்வி என்பது கசப்பான உண்மை.

## முடிவுரை

கனவுகளை எட்டிப் பிடிக்க உண்மையான ஆண்களாய்ப் பெண்களை முடக்காமல் இருங்கள். உங்களின் ஒற்றைப் பாராட்டு, ஒரு ஆதரவான சொல், உங்களின் முதுகு தட்டல், உங்கள் ஒரு ஆதரவுக்கரம் அவளின் கனவுகளிடம், அவளைக் கொண்டு சேர்க்கட்டும். "அவள் தன் சிறகை விரிக்கும் வரை, அவள் எட்டும் உயரம் யாரறிவார்?

# பிரிவு

அம்மாவின் கைகளை இறுக்கமாக
பற்றி கொண்டு இருந்தேன்
ஐந்து வயதில்
பள்ளிக்கு போ என்றாள்
அதுதான் என் முதல் பிரிவு
என் அம்மாவுடன்!..

நண்பர்களுடன்
துள்ளி மகிழ்ந்து
கொண்டிருந்தேன்
பன்னிரண்டாண்டு நட்பை பிரித்தது
தேர்வு முடிவுகள்

கல்லூரியில்
சிறகடித்துக் கொண்டிருந்தேன்
இவர்களையும்
ஒரு நாள் பிரிய வேண்டுமென்று
வருந்தினேன்...

அம்மாவின் கைகளை மட்டும்
பற்றி கொண்டே இருந்திருந்தால்
இத்துணை அன்பும் ஊடலும்
எனக்கு எட்டி இருக்குமோ?..

பிரிவும் ஒருவகை சுகம் தான்





**தேன்மொழி**
இளங்கலை இரண்டாம் ஆண்டு.

## படிக்க ஆசை...

இறுகப்பிடித்த படி எழுந்தேன்..

சுவற்றை அல்ல எழுதுகோலை....

அண்ணாந்து பார்த்தேன்...

அண்டை வீட்டு அண்ணன்...

அக்குளுக்குள் நோட்டை அடக்கியபடி....

ஆற்றங்கரைக்கு சென்றார்.....

நீந்திச் சென்றால் பள்ளி....

என்னால் நீந்த முடியவில்லை.....

ஆற்றில் அல்ல அறிவு என்னும் கடலில்....

நீந்த முயன்றேன் தடுப்பு வந்தது....

உயர்ந்த பாறைகளால் அல்ல.....

உயர்ந்தோர் உதிரத்தாலும் உதடுகளாலும் ....

தடுப்பை தகர்த்தேன் என் தன்னம்பிக்கையால் ....

தாவினேன் கல்விக்கான முதற்கல்லை ....

தேடினேன் அதற்கான மறுகல்லை...

அதை நட்டேன் வாழ்வின் அடிக்கல்லாய்....

இன்னும் உயர ஏங்கினேன்....

இறுகப்பிடித்தேன் எழுதுகோலை....

துணையாய் வந்தன துயரைத் துடைக்கும் புத்தகங்கள் .....

பட்டேன்...பட்டேன்...இன்னும் ஆசைப்பட்டேன்....

வையம் போற்ற வாழ....


பாடம் படிக்க ஆசைப்பட்டேன் ....

புத்தகங்களையும் எழுதுகோலையும்..ஏந்திய படி எழுந்து நின்றேன் ...

என் தலை நிமிரும் ஆசையோடு.....



சு.ராஜமாலதி
இளங்கலை இரண்டாமாண்டு








மு.கருப்பசாமி

இளம் இலக்கியம் இரண்டாமாண்டு

## பிழையின்றி எழுதுவோம்

### வாய்பாடு / வாய்ப்பாடு எது சரி?

தமிழில் சிறார்களுக்கு 'வாய்பாடு' என ஒரு சிறுநூல் தரப்பட்டு, அது மனப்பாடம் செய்யுமாறு வற்புறுத்தப்படும். நானான்கு பதினாறு; நாலைந்து இருபது; நாலாறு இருபத்து நான்கு என இவ்வாறு, முறைவைத்து எல்லோரும் சேர்ந்து சொல்வர். மனப்பாடம் செய்து ஒப்பிக்க வேண்டும். இதைத் தமிழில் கற்கக் கற்க, கணக்குப் பாடம், சிறுவர் குருதியிற் கலக்கும்; நினைவில் நிலைக்கும். முன்னர் வாயால் முறைவைத்துச் சொல்லிப் பழகியதால் வாய்பாடு ஆனது. பிறகு முன்மாதிரி அனைத்திற்கும் பெயரானது. வாய்பாடு படித்தவர்கள் கணித மேதைகளாயினர்.

வாய்பாட்டை மாந்தர்தம் வாய்மொழியாகச் சொல்லிப் படிப்பதால், அது கணினியைவிட நம்பகமானது, அது ஒரு முன்மாதிரி, முன் எடுத்துக்காட்டு ஆகும். கணிதம், பாட்டெழுதும் யாப்பு, அறிவியல், பொருளியல் போன்றவற்றில் முன் மாதிரியாய், வழிகாட்ட வரும் வரையறை விதிகள் (Formula) வாய்பாடு எனப்படும். இவ்வாறு பலவகை வாய்பாடுகளும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முன் மாதிரிகள் ஆகும்.

எந்த ஒரு வாய்பாட்டையும் நெட்டுருச் செய்ய வேண்டும். அதாவது மனப்பாடம் செய்து நினைவில் வைத்திருக்க வேண்டும். இதை 'வாய்ப்பாடு' என எழுதுவது பிழை. பானைக்கு மேலேயுள்ள அதன் 'வாய்'ப்பகுதியை, உலக வழக்கில் 'வாய்ப்பாடு' என்பர். வாய்ப்பாட்டுக்கே முதலிடம் தருவர். இசையில் வாய்பாட்டில், இடையே 'ப்' வரக்கூடாது. வாய்பாடு வேறு; வாய்ப்பாடு வேறு. இதை வாய்பாடு என்றே தெரிந்துகொள்வோம்; அவ்வாறே சொல்வோம்; எழுதுவோம். பெருக்கல் வாய்பாடும் வகுத்தல் வாய்பாடும் தமிழிலேயே சொல்லித் தருவோம்.

### திருவளர் செல்வி / திருவளர்ச் செல்வி எது சரி?

திருமண அழைப்பை எழுதும்போது, அடிக்கடி ஏற்படும் ஐயம் இது. வளர்செல்வியா? வளர்ச்செல்வியா? திருவளர்செல்வன் முருகப்பனுக்கும் திருவளர்செல்வி வள்ளியம்மைக்கும் திருமணமென எழுதவேண்டும். வளர் செல்வன், வளர் செல்வி என்றால், என்றென்றும் வளரும் செல்வர்கள் எனப் பொருள்படும்.

இதற்குக் கால எல்லை கிடையாது. வளர்ந்த, வளர்கின்ற, வளரும் என முக்காலத்திற்கும் பொருந்தும். இதை வினைத் தொகை என்பது இலக்கணம்.'திருவளர்ச் செல்வி' என எழுதுவது தவறு. 'ச்' இடையே வரக்கூடாது. வளர்ச்சி தடைப்படும்!

**திருவளர்செல்வன், திருவளர்செல்வி** என்றும் **திருநிறைசெல்வன், திருநிறைசெல்வி** என்றும் திருத்தமாக எழுதி, நம் பிள்ளைகள் செல்வச் செழிப்புடன் என்றென்றும் வளர வழிவகுப்போமாக!

## பழமுதிர்சோலை / பழமுதிர்ச்சோலை எது சரி?

பழக்கடைகளுக்குப் 'பழமுதிர்சோலை' என்று இன்று, அழகான பெயர் வைக்கின்றார்கள். கோயமுத்தூரில் தொடங்கிய இப்பெயர், இன்று நாடெங்கும் பரவியுள்ளது. பழங்கள் தோன்றி முதிர்கின்ற, என்றென்றும் கிடைக்கும்படியான சோலை அது. பழம் முதிர்ந்தால் கனியாகும். பூக்களும் காய்களும் பழங்களும் பழங்கள் முதிர்ந்த கனிகளும் உள்ள சோலையாதலின் அவை அனைத்தையும் உள்ளடக்கிப் 'பழமுதிர்சோலை' என்றனர்.

இதைப் 'பழமுதிர்ச்சோலை' எனத் தவறுதலாகச் சிலர் எழுதிவிடுகின்றனர். அது கூடாது; இடையே 'ச்' வராது. முக்காலத்திற்கும் உரிமைகூறும் இதில் 'இச்சுப்' போட்டுச் சுருக்கவேண்டாம். இலக்கணத்தில் இதுவும் 'வினைத்தொகை' எனப்படும். முதிர்கின்ற, முதிரும், முதிர்ந்த என முக்காலத்திற்கும் உரியது இது. 'பழமுதிர் சோலை மலை கிழவோனே' என்று, திருமுருகாற்றுப்படையை, நக்கீரர் முடிப்பார். முருகன் என்றும் இருக்கும் இடம் அது என்பதால் உரிமையுடையவன் எனும் பொருளில் கூறியுள்ளார். கிழவோன் உரிமையுடையவன். முருகனது படைவீடுகளில், ஆறாம் படைவீடு இது. மதுரைக்கு அருகிலுளது. அழகான பெயர்; தவறாமல் பயன்படுத்துவோம். பழமுதிர் சோலை முருகன் தமிழ்க் கடவுள். தமிழைப் பிழையின்றி எழுத, அவனருளை வேண்டுவோம்.

நன்றி : தமிழில் அடிக்கடி நேரும் பிழைகள் – பேராசிரியர் தமிழறிஞர் தமிழண்ணல்




பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**தமிழ் படித்தால் வாழ்வு புதுமைபெறும்!**

அறம் பெருகும் தமிழ் படித்தால்;
அகத்தில் ஒளி பெருகும்!
திறம் பெருகும்; உரம் பெருகும்;
தீமைக் கெதிர் நிற்கும்
மறம் பெருகும்; ஆண்மை வரும்!
மருள் விலகிப் போகும்!
புறம் பெயரும் பொய்மை யெலாம்!
புதுமை பெறும் வாழ்வே!




மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்திலிருந்து 1902 முதல் திங்கள்தோறும் வெளிவரும் தனித்தமிழ் திங்களிதழ் 'செந்தமிழ்' வாங்கிப் படிப்பீர்.

தொடர்புக்கு

முனைவர் **ஜெ.போ.சாந்திதேவி**

*முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை*

*மின்னஞ்சல் :* principalsenthamilcollege@gmail.com